|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 13 | குரோதி வூ | புரட்டாசி – ஐப்பசி மீ | அக்டோபர் 2024 | இதழ் 10

## விஸ்வரூப யாத்திரை



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஸஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## புரட்டாசி – ஐப்பசி

மலர் 13 அக்டோபர் 2024 இதழ் 10

### பொருளடக்கம்

| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| தெய்வத்தின் குரல் | 8 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 11 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 12 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 16 |
| விஸ்வரூப யாத்திரை நிகழ்வுகள் | 17 |
| சாதுர்மாஸ்ய விரத பூர்த்தி (Highlights) | 22 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 25 |
| ஐப்பசி மாத விசேஷ தினங்கள் | 28 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 29 |
| வேதாந்த ஸம்வத்ஸ்ரம் | 31 |
| அதவர்வண வேத ப்ரக்தி ஸூக்தம் – 3 | 32 |
| ஆச்சார்ய பரம்பரை | 33 |
| திருமூலர் காட்டும் அவள் | 35 |
| நவராத்திரி மகிமை – ஒரு சிறப்புப் பதிவு | 39 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 42 |
| ஆழ்வார்கள் சரித்திரம் | 44 |
| ப்ரபோத சிந்தாமணி | 46 |
| மூக ஸாரம் | 47 |

भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

**நிர்வாகக் குழு**

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்



## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

**கௌரவ தலைமை ஆசிரியர் :**
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

**வெளியிடுவோர் :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 - 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/– |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/– |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/– |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/– |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/– |
| புரவலர் | ரூ. 10000/– |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

***சூலேன பாஹி நோ தேவி பாஹி கட்கேன சாம்பிகே***
***கண்டாஸ்வனேன ந: பாஹி சாபஜ்யா நிஸ்வனேன ச ।।***

*தேவி சூலத்தால் எம்மைக் காப்பாற்று, கட்கத்தால் காப்பாற்று. மணி நாதத்தால் காத்தருள்வாய். வில் நாண் ஓசையால் காப்பாற்று.*

***ப்ராச்யாம் ரக்ஷ ப்ரதீச்யாம் ச சண்டிகே ரக்ஷ தக்ஷிணே***
***ப்ராமணேனாத்ம சூலஸ்ய உத்தரஸ்யாம் ததேஸ்வரி ।।***

*சண்டிகையே ! கிழக்கிலும், மேற்கிலும் காப்பாய். அங்கனமே உனது சூலத்தைச் சுழற்றி வடக்கிலும், தெற்கிலும் எம்மைக் காப்பாய்.*

***ஸௌம்யானி யானி ரூபாணி த்ரைலோக்யே விசரந்தி தே***
***யானி அத்யர்த்த கோராணி தை ரக்ஷாஸ்மான் ததா புவம் ।।***

*மூவுலகிலும் சஞ்சரிக்கும் உனது அழகிய வடிவங்கள் எவையோ அவற்றாலும் அளவு கடந்த கோரமான வடிவங்கள் எவையோ அவற்றாலும் இப்பூவுலகையும் எம்மையும் காப்பாய்.*

***கட்கசூல கதாதீனி யானி சஸ்த்ராணி தே அம்பிகே***
***கர பல்லவ சங்கினீ தைரஸ்மான் ரக்ஷ ஸர்வத: ।।***

*அம்பிகே ! உன் தளிர் போன்ற கரங்களில் வாள், சூலம், கதை முதலிய ஆயுதங்களை ஏந்துகிறாயோ அவைகளால் எம்மைக் காப்பாற்று.*

***ஏதத்தே வதனம் ஸௌம்யம் லோசன த்ரய பூஷிதம்***
***பாது ந: ஸர்வ பீதிப்ய:காத்யாயினீ நமோஸ்து தே ।।***

*உன்னுடைய மூன்று கண்களால் அலங்கரிக்கப்பட்ட வதனம் எம்மை எல்லா பயங்களிலிருந்தும் காக்கட்டும். காத்யாயினி உனக்கு நம்ஸ்காரம்.*

***ஜ்வாலா கராலமத்யுக்ரமஸேஷாஸுர ஸூதனம்***
***த்ரிசூலம் பாது நோ பீதே பத்ரகாலி நமோஸ்து தே ।।***

*மிகுந்த கூர்மையயும், பயங்கர ஜ்வாலையும் அசுரர்களை மீதி இல்லாமல் அழிக்கும் உன் த்ரிசூலம் எங்களை பயத்தினின்று காக்கட்டும். பத்ரகாளி உனக்கு நமஸ்காரம்.*

***ஹினஸ்தி தைத்ய தேஜாம்ஸிஸவ்னேனாபூர்ய யா ஜகத்***
***ஸா கண்டா பாது நோ தேவி பாபேப்யோ அன; ஸுதானிவ ।।***

*தேவி! எது தன் நாதத்தால் உலகை நிரப்பி தைத்யர்களின் வீர்யத்தை அழிக்கின்றதோ அந்த மணியானது சகடத்திடையில் விழுவதினின்று புத்ரர்களை தாய் காப்பது போல் பாவங்களிலிருந்து எம்மைக் காக்கட்டும்.*

*தேவி மஹாத்மியம்*

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

**‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# ஆசிரியர் பக்கம்

## *வேண்டாம் விபரீத வளர்ச்சி*

The gross per capita Income of India is 2392 dollar per year. This should exceed 14005 dollar per year in the near future. Prime Minister has pointed out clearly, to achieve this - focus on Infra structure and employment should be done. World Bank has belittled Indian Economy saying to achieve the aforesaid performance it will take more than 75 years and more. India cannot surpass American Economy.

*மேலே கூறப்பட்ட செய்திகள் பொருளாதாரத்தில் நம் நாடு அடைய வேண்டிய லக்ஷியத்தைக் கூறுகின்றன. ஒரு நாடு வளர்ந்த நாடு என்பதற்கு அதன் பொருளாதாரமே ஆதாரமாக உள்ளது. இந்தப் பார்வை சரியானது அல்ல என்று நாம் நினைக்கிறோம்.*

*அமெரிக்காவின் பொருளாதாரம் கடன் வாங்கி களிப்பது.* ***ருணம் க்ருத்வா க்ருதம் பிபேத்'*** *என்னும் சார்பான கொள்கையைச் சேர்ந்தது. அந்நாட்டின் கடன் சுமை அந்த நாட்டையே அழித்துவிடக் கூடிய அபாயம் உள்ளது. எனவே ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் பொருளாதாரம், மாட மாளிகைகள் போன்றவை அல்ல. நம் நாடும் இந்தப் பாதையில் பயணிக்க வேண்டாம் என்பது நம் விருப்பம்.*

*ஒரு நாட்டின் வளர்ச்சி அல்லது வளம் அதன் கலாசாரத்திலும், தர்மத்திலும் தான் உள்ளது என்று கருதுகிறோம். தர்மம், அர்த்தம், காம, மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களில் தர்மத்தின் வழியாகத்தான் பொருள் சேர்க்க வேண்டும்.*

*தர்மத்தின் படித்தான் இன்பமும். இது நம் சாஸ்த்ரங்கள் காட்டும் வழி. ராமாயணமும், மகாபாரதமும், தர்ம சாஸ்த்ரங்களும் இதையே வலியுறுத்தும். அதன் படிதான் நாம் நடந்து வந்திருக்கிறோம். சில சான்றுகளைப் பார்ப்போம்.*

*ஹே பரதனே! அறத்தை விட்டு அர்த்ததையும், காமத்தையும் அனுசரிக்கிறாயா?*

*ராமாயணம் அயோத்யா*

*கைகளைத் தூக்கிக் கொண்டு 'அறத்தினாலேயே பொருளும் காமமும் சித்திக்கும்'' ஏன் ஒருவரும் கேட்பதில்லை'*

*பாரதம் பாரத ஸாவித்ரீ*

*அறத்தான் வருவதே இன்பம் [திருவள்ளுவர்]*

*இதையே பெரியவாளும் கூறுகிறார்*

*'நாம் எப்படி வாழவேண்டுமோ, அப்படியே மற்றவர்களும் வாழ வேண்டும்' என்று நினைப்பது உத்தமமான எண்ணம் அப்படி எண்ணம் இருந்துவிட்டால் போதுமா? நாம் டாம்பீகமாக இருந்து மற்றவர்களும் அப்படி இருக்க வேண்டும் என்று ஆசைபட்டால் அது நடக்குமா? அப்படியே நடந்து அமெரிக்கா மாதிரி லக்ஷுரியஸாக வாழ முடிந்தால் அது நல்லது தானா? ஸௌக்யங்கள் அதிகரிக்க, அதிகரிக்க ஆத்மா அபிவிருத்திக்கே வழி இல்லாமல்தானே ஆக்கியிருக்கிறது. ஆசை நெருப்புபோல் எவ்வளவு போட்டாலும் கபளீகரம் பண்ணிவிடும். எவ்வளவு சௌகர்யங்கள் இருந்தாலும் திருப்தி இல்லாமல் புது சௌக்யங்களைத் தேடும். அதிருப்தி, குற்றங்கள் இவைகளைத்தான் அமெரிக்காவில் பார்க்கிறோம்.*

*இந்த சௌக்யங்கள் இல்லாமல் போய்விட்டால் தான் சாந்தி கிடைக்கும் என்று அங்குள்ள புத்திசாலிகள் த்யானம், யோகம், பஜனை என்று கிளம்பியிருக்கிறார்கள்.*

*மனுஷ்யனின் ஆத்மா அபிவிருத்திக்கு ப்ரதிகூலமாக வெறும் லௌகிக சாதனங்களால் நிரந்தர பயனில்லை. அபகாரம்தான். எத்தனைகெத்தனை எளிமையாக வாழ்கிறோமோ, அத்தனைகத்தனை ஆத்ம க்ஷேமம். நாம் எளிமையாக இருந்து மற்றவர்களையும் எளிமையாக வாழச் செய்ய வேண்டும். ஏழைகள் உட்பட ஆத்ம அபிவிருத்திக்கு எது நல்லதோ அப்படி வாழ்வதுதான் உத்தமம். ரொம்ப ஸிம்பிளாக வாழ வேண்டும்.*

*அடிப்படைத் தேவைக்கு மேல் பல விஷயங்களுக்குப் பறக்க வேண்டிய அவஸ்யமில்லை. மற்றவர்களும் அப்படி இருக்க நாம் எளிமையாக வாழ வேண்டும்.'*

*தெய்வத்தின் குரல் -*
*மூன்றாம் பகுதி*

Global Economy *என்பதற்காக ட்ரில்லியன் டாலர் இலக்கு வைத்துக் கொள்ளலாம். வழி முறைகள் நேர்மையாக இருக்க வேண்டும். உலக வங்கியின் வலையில் விழாமல் தர்மவழியை பின்பற்றுவது அவஸ்யம்.* ***'ஊர் மெச்ச பால் குடிக்க வேண்டாம்'.*** *இப்போது நம் அரசு போகும் பாதை சரியாகத்தான் உள்ளது.*

*ட்ரில்லியன் டாலர் இலக்கைப் பேசும் மத்ய அரசு மக்களை நல்ல வழியில் சம்பாதிக்க ஊக்கமளிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். சாமான்ய மக்களுக்கும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவர்கள் நிராதாரவாக இருக்கக் கூடாது. இது ஒரு மாயை. இதிலிருந்து அரசு விடுபட வேண்டும் என்று பகவானை ப்ரார்த்திக்கிறோம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*

*ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர !*


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.


வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 044 - 24740549

# தெய்வத்தின் குரல்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## மதமாற்றம் இருக்கும்வரை தாய்மதத்திற்கு மாற்ற அனுமதி



சட்டம் இயற்றிவிடுவதால் மட்டுமே எந்தக் குற்றமும் நிகழாமல் தடுத்து நிறுத்திவிட முடிவதில்லை. எல்லா நாடுகளிலும் எல்லாக் குற்றங்களும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அவ்வாறு சுய விருப்பமொன்றின் மீது மட்டுமேயில்லாத மதமாற்றக் குற்றங்களும் நடைபெறுமாயின், அவை நடைபெறும் வரையில் அவற்றுக்கு எதிர் நடவடிக்கையாகத் தாய் மதத்திற்கே மீண்டும் மதம் மாற்றுவதைக் குற்றமாகக் கருதாமல் அரசாங்கம் அநுமதிக்க வேண்டும்.

சுய விருப்பத்தின் மீது எந்த ஒரு பிரஜையின் எந்த ஒரு மதத்தையும் தழுவியிருக்கச் சுதந்திர உரிமையைச் சட்டபூர்வமாக ஓர் அரசாங்கம் அளிக்கும்போது, கையோடு கையாக, அச்சுதந்திரத்திற்கு ஊறு பயப்பதான மத மாற்றத்தைச் சட்டப்பூர்வமாகத் தடுப்பதில் தனக்குள்ள பொறுப்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதாலேயே, இவ்விஷயம் அதற்குரிய முக்கியமான கவனத்தைப் பெறாமலிருந்துவிடக் கூடாதெனக் கருதி ஒரு மதத்தின் தலைமைப் பீடங்களில் ஒன்றில் இருப்பவரின் கடமையாக இவ்வளவு விரித்துக் கூறினோம்.

இதனால், எல்லா மதங்களுக்குமே சுதந்திர பாரத அரசாங்கம் ஒருபோன்ற ஆதரவளிக்க வேண்டும் என்ற கொள்கையை நாம் ஆட்சேபிப்பதாக அர்த்தமாகாது. உரிய முறையில் அவ்வாதரவு நல்கப்படுவதை வரவேற்கவும் வலியுறுத்துவுமே செய்கிறோம். அந்த 'உரிய முறை'யையே நமது ஆலோசனைக்கு எட்டியபடி விளக்கினோம்.

# இந்தியாவின் உயிர்நிலையே மதமும் ஆன்மிகமும்தான்

நவீன சீர்த்திருத்தக்காரர்களும் போற்றும் பல கருத்துக்களைக் கொண்ட விவேகானந்தர் போன்றோரும், அன்னி பெசன்ட் போன்ற மேல்நாட்டு நல்லறிஞர்களுங் கூட இந்தியாவின் உயிர்நிலையே மதத்தை மையமாகக் கொண்ட அதன் ஆன்மிகம் தான் என்றே வலியுறுத்தியிருக்கின்றனர். அதனை மறந்து, மற்ற துறைகளில் இந்நாடு எத்தனை முன்னேற்றம் கண்டாலும் அது உயிரிழந்த சவத்திற்குச் செய்யும் அலங்காரமாகத் தானிருக்கும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். மக்களின் உலகவியல் ஆசைகள் வெறித்தனமாக வலுக்காதவாறு ஹிந்து மதம் எனப்படும் சநாதன தர்மத்தினால் அவர்களுக்கு ஆன்மிகவியலை மதாசரணைகளாகவும் தத்துவக் கோட்பாடுகளாகவும் கொடுத்து, அவர்களது உலக வாழ்வு சம்பந்தப்பட்ட அனைத்தையும்கூட ஈசனை மையம் கொண்ட சடங்குகளாகப் புனிதப்படுத்தியளித்து, உலகியலுமே ஆன்மவியலுக்கு உபாயமாகுமாறு உயர்த்திச் சிறப்புச் செய்து ஆதி காலத்திலிருந்து உலக நாடுகளிடையில் தனிச் சிறப்புப் பெற்றது நமது பாரத நாடு. மதவியலின் மூன்று அங்கங்களில் ஒன்றான தர்மம் என்பதை விரித்துக் கூறும் சநாதன தர்ம சாத்திரங்கள், ஒரு மானுடன் செய்யக்கூடிய சகல காரியங்களுமே ஆன்ம நலனுக்குப் பயனாகும்படியாக அவை ஒவ்வொன்றுக்கும் விதி வகுத்துக் கொடுத்துள்ளன. நல்லொழுக்கமாம் அத்தர்மம் ஈசனைச் சுற்றியே படர்ந்திருப்பதாகவும் ஆக்கிக் கொடுத்திருக்கிறது. இவ்வழி முறைகளையே இந்நாட்டு மக்கள் பூர்வ காலத்திலிருந்து பற்றி ஒழுகி வந்திருப்பதால்தான் பிற நாட்டின் மேன்மக்களும் ஒப்புக்கொண்டு பாராட்டுமாறு இந்நாட்டிலேயே அதிக பட்சமாக மஹான்களும், மத நூல்களும், தத்துவ சாஸ்திரங்களும் தோன்றி, பிற நாட்டுப் பூர்வ காலப் பெரியோர்களும் அவற்றிலிருந்து ஆன்மிக உயர்வு கண்டு வந்திருக்கின்றனர். இவற்றின் துணை கொண்டு தத்தமது சூழ்நிலைகளுக்கேற்ற சித்தாந்தங்களை அவர்கள் உருவாக்கியுள்ளனர். இவ்வாறாக, பிற நாடுகளின் உலகியற் போக்கைச் சமனப்படுத்தும் நாடாகவும் நமது நாடே திகழ்ந்திருக்கின்றது. இன்றைக்கும் மேல் நாட்டின் உலகியல் சுக சாதனங்கள் யாவற்றையும் ஆண்டு அனுபவித்தும் வாழ்க்கையின் நிறைவைக் காணாத அந்நாடுகளின் பக்குவம் பெற்ற நன்மக்கள் நம் நாட்டுக்கே வந்து ஆன்மவியலில் ஈடுபட்டு அந்நிறைவை எய்துவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

இவ்வாறு சிற்றின்ப உலகியலிலிருந்து பேரின்ப ஆன்மவியலுக்கு வழிகாட்டியாக உலக நாடுகளுக்கு உதவி புரிவதையே தனது தனிப்பெருமையாகக் கொண்ட நமது நாட்டில் அந்த ஆன்மவியலை நாமே புறக்கணித்து மேல் நாடுகளின் உலகியல் முன்னேற்றத்தில் மோஹித்து அதன் பின்னேயே ஓடும் பேதமையை மெல்ல மெல்லப் பற்றிக்கொண்டு சுதந்திரம் பெறும் இச்சமயத்தில் அது முற்றியும் விட்டது.

## இந்தியாவில் மத உணர்வின் நலிவு; ஆயிரம் ஆண்டு வரலாறு காட்டுவது


ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே நாம் அந்நியராட்சிக்கு ஆளாகத் தொடங்கினோம். அப்போது முதலில் வந்தவர்கள் ஆசியாவைச் சேர்ந்த பிற நாட்டவர் தாம். அவர்களிலேயே பல பிரிவினரின் ஆளுகையைப் பல அளவுகளில் பெற்று, முடிவாகப் பல காலம் முற்றிலுமே அவர்களின் ஆளுகை அல்லது படையெடுப்புக்கு ஆளாகும் நிலை நம் நாட்டிற்கு வந்தது. விளைவாக ஆயிரமாண்டுக்கு முன்வரையில் உலகுக்கே வழிகாட்டியாக மதாசரணைகளைப் பற்றுதலுடன் பின்பற்றிய ஹிந்துக்களின் நாடாகவே இருந்த நமது நாட்டில், பிற்பாடு அவ்வாசிய நாட்டு அந்நியர்களில் பலர் ஹிந்து மதத்தை எதிர்த்து ஹிம்சை வழியில் செய்த நடைமுறைகளினால் ஹிந்துக்கள், குறிப்பாக இந்நாட்டின் வடபுலத்தினர் தங்களது மதாசாரங்களை நிர்பயமாகவும், நிச்சிந்தையாகவும் பின்பற்ற முடியாமலாயிற்று. இது இப் பாரத நாட்டுக்கேயான தனிப்பெருமையாக அதற்கு ஜீவ சக்தியூட்டி வந்த ஆத்மிக கலாசாரத்தை நலிவுபடுத்தத் தொடங்கியது. அதோடு காலம் செல்லச் செல்ல, இங்கு ஆட்சிக்கு வந்துவிட்ட அந்த அந்நியரின் வழக்கங்கள், கலை, உடை முதலியவற்றை சிலவற்றை ஹிந்துக்கள், குறிப்பாக இந்நாட்டின் வடபுலத்தினர், தமதாக ஏற்றனர். எனினும் இத்தனையிலும் சற்று திருப்தி தரும் ஓரம்சமாக, இவற்றால் ஹிந்துக்கள் தமது வாழ்க்கை முறை முற்றிலும் அந்த ஆசிய நாட்டு அந்நிய ஆட்சிக்காரர்களுடையதன் பிரதியாக (copy -ஆக) ஆகிவிடாமலே, தமது தனித்தன்மையை க்ஷீணித்த காரணம், அவர்களை ஹிந்துக்கள் நாகரிகத்தில் தம்மைவிட மேம்பட்டவர்களாக எண்ணாததுதான்.

இவ்வாறு எழுநூறு ஆண்டுகள் சென்றபின், கடைசி முந்நூறு ஆண்டுகளில் ஐரோப்பிய நாட்டு அந்நியர்கள் இங்கு மெல்ல மெல்ல ஆட்சி பிடிக்க ஆரம்பித்ததிலிருந்து தான் நிலைமை விபரீதமாகவே மாறலாயிற்று.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



## கல்வி


நமது இந்திய நாடு சுதந்திரம் அடைந்து 53 ஆண்டுகள் ஆகிறது. இதுவரையில் நாட்டில் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், விவசாயத் திற்காகவும் தொழில்களுக்காகவும் பலவிதத் திட்டங்கள் தீட்டப் பட்டு, பல முறைகளில் நாடு முன்னேற்றம் அடைந்து வருகிறது. ஆனால் நாட்டிற்கே அடிப்படையானது கல்வி. கல்வி உணர்ச்சியை வைத்துத்தான் ஒரு நாட் டின் பெருமையெல்லாம் பேசப்படுகிறது. அமெரிக்கா, ரஷியா, ஜப்பான் போன்ற நாடுகள் கல்வித்துறையில் முன்னேற்றம் கண்டு விஞ்ஞானத்தின் முன்னேற்றமாக சந்திரமண்டலம் வரை சென்று புகழ் பெற்று விளங்குகின்றன. நம்முடைய பாரத நாட்டில் சர்க்காரும் கல்வி வளர்ச்சி விஷயத்தில் அக்கறை காட்டாமலிருப்பது வருந்தத்தக்கதாக உள்ளது. கல்வி பல நிலையில் உள்ளது. 5-ஆவது வகுப்புவரை இளநிலைக் கல்வி; 6-லிருந்து 8-வரை நடுநிலைக் கல்வி; அதற்குமேல் உயர்நிலைக் கல்வி; அதற்கும் மேலாகக் கல்லூரிக் கல்வி; அதற்கும் மேலாக ஆராய்ச்சி செய்ய வேண்டிய ஒரு நிலை. எல்லாக் கல்வி நிலைகளிலும் பொதுக் கல்வியறிவோடு கூட இந்திய நாட்டிற்கு ஏற்றதான கலாசாரக் கல்வியும் தேசியக் கல்வியும் தொழில் இயல் கல்வியும் சேர்ந்து வளர்ந்தால் அந்தக் கல்வி முழுமை பெற்றதாக ஆகிறது.

தற்கால மாணவர்கள் பலர் கல்லூரிப் படிப்பு முடித்துங்கூட, ஆராய்ச்சிப் படிப்பு முடித்துங்கூட அவரவர்களுக்கு ஏற்றவாறு தொழில் துறையிலும் உத்தியோகத் துறையிலும் சரியான வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லை.

உயர்நிலைப் பள்ளியில் படித்த மாணவர்களுக்கும் இன்னும் வேலை கிடைக்கவில்லை. கல்லூரி மாணவர்களுக்கு இன்னும் வேலை கிடைக்காததனால் மாணவர் உலகம், இளைஞர் உலகம் வறண்டு போயிருக்கிறது. அதனால் எந்த ஒரு காரியத்திலும் உத்ஸாகம் இல்லாமல் திடீர் மாற்றமுள்ள வாழ்க்கையைப் பற்றி நம்பிக்கையில்லாமை போன்ற பல வகை களில் இருக்கிறார்கள். ஆகவே இதற்கு எல்லாவற்றிற்குமாக அரசாங்கமோ பல்கலைக்கழகமோ சீக்கிரம் முடிவெடுக்க வேண்டும். முக்கியமாக மாணவர் களிடையே அரசியல் பற்று நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. அதனால் படிக்கக் கூடிய சூழ்நிலை குறைந்து வருகிறது. இந்நிலை மாற வேண்டும்.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



## Florida Kempa Sath Sangh

**குரூர் பிரம்மா குரூர் விஷ்ணு:**
**குரூர் தேவோ மகேஷ்வர:**
**குரு: க்ஷாக்க்ஷாத் பரம் ப்ரஹ்ம**
**தஸ்மை ஸ்ரீ குரவே நம:**
**வந்தே குரு பரம்பராம்**

இன்றைய சனாதன தர்மம் மிக மிகப் பழமையானது. **சர்வே ஜனா சுகினோ பவந்து** என்று அனைத்து உயிரினங்களும் பிரசாந்தமாக, சௌக்கியமாக வாழ வேண்டுமென்று உபதேசிக்கக் கூடிய ஒரே தர்மம். இந்த தர்மம் பெருமையுடன் கூடியதாக இருந்தாலும், அந்தப் பெருமையை, அந்த கௌரவத்தை, அதன் உசத்தியை நாம் தெரிந்து கொள்ளும் விதமாக, மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கால கட்டம் இது.

மக்களும் சௌகரியத்தை எதிர்பார்த்து செயல்படும்போது, அந்த சாஸ்வதமான சௌக்கியம், நிரந்தரமான சாந்தி என்பது தர்மத்தின் மூலமாகத்தான் கிடைக்கும் என்பதை புரிந்து கொண்டு, நித்ய கர்ம அனுஷ்டானங்களை செய்து, ஈஸ்வர பக்தி, சடாச்சாரம், சத்சம்பிரதாயத்தை ஒவ்வொரு குடும்பத்திலேயும் எதா சக்தி, அவர்கள் அனுஷ்டானம் செய்து, அதன் மூலம் **துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம், சமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம்** என்பது போன்று, அதாவது துரிதக்ஷயம், தோஷமற்ற, பாபமற்ற, கஷ்டமற்ற ஒரு நிலையை அடைந்து, பரமேஸ்வரனுடைய - **ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:** ( स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानव: ) என்பதாக நம்முடைய நித்ய அனுஷ்டான கர்மாக்கள் மூலமாக பரமேஸ்வர ப்ரீத்தியை சம்பாதித்து - ஐதிக – ஸ்ரேயப் பரம்பராஹா – என்பதாக பழைய ஸ்ரீ முகத்தில் இருக்கும் அம்மாதிரி ஸ்ரேயஸ்யை அடைவதற்கு – அதாவது அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை.

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்பது புரிந்து கொள்வதற்கு சில நேரமாகிறது. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதை இந்தக் காலத்தில் நிறைய பேர் புரிய வைச்சிண்டு இருக்கா. பைசா இல்லையென்றால் இந்த காலத்தில் மதிப்பு என்பது இரண்டாவது பக்ஷம் தான். அப்படி இருக்கும் போது, அருளையும் பொருளையும் பெற்று சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு, நம்முடைய மக்கள் வெவ்வேறு தேசங்களில், பிரதேசங்களில் வசித்தாலும், நம்முடைய நித்ய கர்ம அனுஷ்டானங்கள், தேவதா ஆராதனை, அதிதி சத்காரம், ஆச்சார்ய பக்தி இவைகளைத் தொடர்ந்து பின்பற்றும் விதமாக, குல தெய்வ பூஜைகளை வருஷத்திற்கு ஒரு முறையாவது குல தெய்வ கோவிலுக்குச் சென்று, அந்த குல தெய்வக் கோவிலில் நடைபெற வேண்டிய நித்ய பூஜைகளுக்கு, கும்பாபிஷேகத்திற்கு ஒத்தாசை செய்து, குழந்தைகளுக்கு நமது தர்மத்தை, நமது பாரம்பரியத்தை, எந்த நதியுடன் நமக்கு சம்பந்தம், எந்த கோவிலுடன் நமக்கு சம்பந்தம், எந்தப் பண்டிகையோடு நமக்கு சம்பந்தம், எந்த விதமான விசேஷ சுமங்கலிப் பிரார்த்தனைகள் நம்முடைய குடும்பத்திலே இருந்து வருகின்றன- இது போன்று அவர்கள் தர்ம மூலத்தைப் பின்பற்றி, வேதோ அகிலம் தர்ம மூலம் என்பதாக, அந்த வேத மார்க்கத்தை ஆதிசங்கர பகவத் பாதாள் சொல்கிறார்கள்.

அந்த உபநிஷதம் சார்ந்த சனாதன தர்மத்தை நாம் பின் பற்றுவதற்கு பிரச்சாரமும் தேவை, நிறைய சத்சங்கம் தேவை. **நேயம் சஜ்ஜன சங்கே சித்தம்** என்பதாக நம்முடைய பகவத்பாதாள் சொல்லி, அந்த சத்சங்கத்தை நாம் மேலும் மேலும் அதிகரித்து (அதிகரிக்க வேண்டும்) ஏனென்றால், கடற்கரையில் வசிப்பவர்களுக்கு, அந்த பூமியில் இருக்க வேண்டிய நிலத்தடி நீரை சரியாக பராமரித்தால் தான், அந்த உப்பு நீர் உள்ளே வராமல் இருக்கும்.

அதனால் சுத்தி இருக்கக்கூடிய சூழ்நிலைகளிலே, வெவ்வேறு வாசனைகள், வெவ்வேறு கர்மத்திற்கும், நம்முடைய சாஸ்திர சம்ப்ரதாயத்திற்கும் விரோதமான, சம்பந்தமில்லாத தடைகளை ஏற்ப்படுத்தக் கூடிய, தடங்களை ஏற்படுத்தக் கூடிய சஞ்சல புத்தியை தர்மத்திலே ஏற்ப்படுத்தக் கூடிய சூழ்நிலைகள் இருப்பதுனாலே சத்சங்கத்தின் தேவை அதிகரிக்கிறது.

நெருக்கமான, அதாவது ஒரே கலாசாரத்தை பின்பற்றுபவர்கள் அடிக்கடி சந்திந்துக் கொண்டு, நம்முடைய தர்ம விஷயங்களை சிந்திக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் நிறைய

இருக்கின்றன. ஆகவே, வெவ்வேறு ஊரில் இருப்பவர்களும் தாய் மொழியை கற்றுக் கொடுப்பது - தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற தாய் மொழிகளை கற்றுக் கொடுப்பது, சமஸ்க்ரித பாஷையில் பரிக்ஷயம், உச்சாரணம், இங்கிருந்து வெளிநாடு செல்பவர்களுக்கு அந்த வெளிநாட்டு பாஷையில் எப்படி உச்சரிக்க வேண்டும் என்று சொல்லித் தருகிறார்கள், அது போன்று நம்முடைய பக்தர்களுக்கு ஒரு ஹோமம், ஒரு பூஜை என்று சொல்லும் போது, வாத்தியார் சொல்வதை திருப்பிச் சொல்லக் கூடிய அளவிற்கு அந்த உச்சாரனத்தை, pronunciation practices யை அவர்களுக்கு ஏற்ப்படுத்தி, அந்த சம்ஸ்க்ருத क, ख, ब அக்ஷரத்திலே அப்யாசம் உருவாக்கி அவர்களுக்கு ஓரளவு வாத்தியார் சொல்வதை கவனமாகக் கேட்டு, திருப்பிச் சொல்லக் கூடிய ஒரு பரிக்ஷயத்தை பிரதோஷம் போன்ற நாட்களிலே ஸ்தோத்திரங்கள், சூக்தங்கள் சொல்லக் கூடிய பரிக்ஷயத்தை ஏற்படுத்தி, இந்த சனாதனமான ப்ராசீனமான தர்மங்கள் மறுபடியும் இந்தப் பிரதேசங்களிலே-அதாவது கன்யாகுமரி நாகர்கோவிலில் இருந்து ஆரம்பித்து, தாமிரபரணி கரையிலே, காவிரிக் கரையிலே, தென்பண்ணை ஆற்றங்கரையிலே, பாலாற்றங் கரையிலே இப்படி இந்த நதி தீரத்திலே வளர்க்கப்பட்ட இந்த வைதீக சனாதன தர்மமானது இங்கு பலஹீனம் ஆகாமல், இங்கு இருக்கக் கூடிய கோவில்களிலும், தூப, தீப நெய்வேத்யங்கள், வேத பாராயணங்கள், உற்சவங்கள், ஆவணியா விட்டங்கள் நல்ல முறையிலே நடைபெற்று, சாஸ்த்ரியமான முறையிலே நடைபெற்று, அதற்கு சந்தர்ப்ப சூழ்நிலைகள் விரோதமாக அமையாமல், அதற்கு அனுகூலமான சந்தர்ப்ப சூழ்நிலைகள், நல்லபடியாக இருப்பதற்கும், எங்கிருந்தாலும் அவர்கள் தங்களோடும், கிராமத்தோடும், தங்களது குல தெய்வத்தோடும், தங்களது குல குருவோடும் சம்பந்தம் வைத்துக் கொள்வதற்கு, ஸத் சங்கத்தை மேலும், மேலும் அதிகரிக்க வேண்டும்.

அதிலே ஸ்ரீ காஞ்சி காமகோடி சேவா foundation KKSF மூலமாக Florida மாகாணத்திலே Kempa என்ற பகுதியிலே பல்வேறு சத்சங்கங்கள், பாத பூஜைகள், அனுஷம் சத்சங்கம்; அது போன்று சனாதன தர்ம சேவா கிராமம் என்பதாக ஆந்திரப் பிரதேசத்திலே உத்தேசிக்கப்பட்டு இருக்கக் கூடிய தார்மீக நர்சரி programme – மரம் நமக்கு காயைக் கொடுக்கிறது, பழத்தைக் கொடுக்கிறது, ஸ்ரீ சூக்த ஹோமத்திற்கு வில்வ பழம் உபயோகப்படுத்துகிறார்கள். அல்லது வில்வ பத்திரத்தை-ஏக வில்வம் சிவார்ப்பணம் என்று நாம் கார்த்திகை மாசத்திலே, ஸ்ரவண மாசத்திலே உபயோகப்படுத்துகிறோம்.

(தொடரும்)

இப்படி இலையை உபயோகப்படுத்துவதாக இருக்கட்டும், பழத்தை உபயோகப்படுத்துவதாக இருக்கட்டும், அதற்கெல்லாம் மரத்தை நட வேண்டும். அதற்கு தர்ம சிந்தனையை வளர்ப்பதற்கான அங்குரார்ப்பணமாக – கும்பாபிஷேகத்தில் அங்குரார்ப்பணம் வைக்கிறார்கள். அது போல எதிர்கால சந்ததியினர் நம்முடைய உணவு முறைகள், நமது உணர்வுகள், நம்முடைய உபதேசங்களை தெரிந்து கொண்டு, புரிந்து கொண்டு, ஏற்றுக் கொண்டு, அதை நடத்தக் கூடிய தைரியத்தையும், அதிலே ஈடுபாட்டையும், சக்தியையும் வளர்த்து கொள்வதற்கு, இது போன்ற சனாதன சேவா கிராமம் என்ற ஒரு அமைப்பை ஒவ்வொரு மாநிலத்திலேயும் அமைத்து, அதன் மூலமாக ஒரு ஆர்ஷ்ய சம்ஸ்கிருதி, ரிஷிகள் மூலமாக வழிகாட்டப்பட்ட தேசம் இந்த பாரத தேசம்.

ரிஷிகள் விஞ்ஞானத்தையும் அளித்து இருக்கிறார்கள். நமக்கு வேண்டிய சௌக்கியத்திற்கு வழியையும் காண்பித்து இருக்கிறார்கள். Development என்று சொல்லக் கூடிய அவர்கள் தங்களுடைய உதாரணமான சிந்தனை மூலமாக, விசாலமான ஒரு கண்ணோட்டத்தின் மூலமாக, ஏழ்மையை அகற்றுவதற்கு- poverty -அதாவது உள் அகங்காரமற்ற பார்வை, மூலதனம் – Garibi Hatao – அனைத்து மக்களும் அன்புடன் பழகுவதற்கும், த்வேஷமற்ற பார்வை, அனைவரையும் அரவணைத்து செல்லும் பக்குவம் – இப்படி அவர்கள் நல்லதொரு கண்ணோட்டத்தை நமக்கு அளித்திருக்கிறார்கள்.

அந்த ஆர்ஷ்ய சம்ஸ்க்ருதி மூலமாக உலகத்தில் சாந்தி என்பது ஏற்படுகிறது. சாந்தி என்பது ஏற்பட்டால், வளர்ச்சி என்பது சுலபமாக உலகத்திலே சாதிக்க முடிகிறது. ஆகவே, அந்த சாந்திக்கு அடிப்படையாய் இருக்கக் கூடிய, சாந்தி மந்திரங்களை சொல்லக்கூடிய அந்த வைதீக கலாசாரத்தை, சிறிய வயது குழந்தைகளிடையே அந்த நம்பிக்கை, அந்த அறிவை நாம் தயார் செய்யக் கூடிய சமுதாயப் பொறுப்பு இவைகளுடன் கூடிய ஒரு நல்ல முறையை தற்பொழுது தமிழ்நாட்டிலே பல இடங்களிலும் - அந்த ஹம்ஸகாளி வேத வித்யா யோஜனா என்பதாக part time Vedic education system என்பது நடந்து கொண்டு வருகிறது. பெங்களூரிலும் நடை பெற்று வருகிறது.

அதே போன்று ஸ்த்ரீகளுக்கான படிப்பும் மகாராஷ்டிரா, தெலுங்கானா இப்படி பல ஊர்களில் – திருவானைக்காவல், திருப்பதி, விஜயவாடவிலும் நடைபெற்று வருகின்றன.

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

# सदासिव ब्रह्मेन्द्र कीतर्ना:

## भज रे रगुवीरम् मानस भज रे रगुवीरम्

अम्बुदडिम्बनगात्रम् अम्बुदवाहन नन्दन दात्रम् (भज)

कुशिकसुतार्पितकार्मुक वेदम् वशिहृदयाम्बुजभास्करपादम् (भज)

कुण्डलमण्डनमण्डितकर्णम् कुण्डलिमन्जकमद्भुतवर्णम् (भज)

दण्डितसुन्दसुतादिकवीरम् मण्डितमनुकुलमाश्रय शौरिम् (भज)

फरमहम्समखिलागम वेह्यम् परमवेदमकुटीप्रतिपाह्यम् (भज)

## பஜ ரே ரகு வீரம் மானஸ பஜ ரே ரகு வீரம்

அம்புதடிம்பவிடமப்ன காத்ரம் அம்புத வாஹன நந்தன தாத்ரம் (பஜ)

குஸிகஸுதார்பிதகார்முக வேதம் வஸிஹ்ருதயாம்புஜபாஸ்கர பாதம் (பஜ)

குண்டல மண்டனமண்டிதகர்ணம் குண்டலிமஞ்சகமத்புதவர்னம் (பஜ)

தண்டிதஸுந்தஸுதாதிக வீரம் மண்டிதமனுகூலமாஸ்ரய சௌரிம் (பஜ)

பரமஹம்ஸ்மகிலாகமவேத்யம் பரமவேதமகுடீப்ரதிபாத்யம் (பஜ)

*பொருள் : ரகுவம்சத்து வீரனான ஸ்ரீ ராமனை பஜிப்பாய். ஹே! மனமே! மிகுந்த தீரனான ராமனை பஜிப்பாய். மேகக்கன்றை யொத்த திருமேனியை உடையவனும், மேகத்தை வாகனமாகக் கொண்ட இந்த்ரனின் மகன் வாலிக்கு அரிவாளாகிய ஸ்ரீ ராமனை குசிக முனிவரான விஸ்வாமித்ரரால் தனுர் வேதத்தை தன்னிடம் ஸமர்ப்பிக்கப் பெற்றவனும் இந்த்ரியங்களை வசப்படுத்தியவர்களின் இதய தாமரைகளுக்குச் சூர்யனாக அமைந்த பாதங்களை உடையவனுமான ஸ்ரீ ராமனை, குண்டலங்களை அணிந்த செவிகளை உடையவனும், குண்டலி என்னும் ஆதாரத்தை கட்டிலாகக் கொண்டிருப்பவனுமான ஸ்ரீ ராமனை ஸுந்தம் மகனான மாரீசனை தண்டித்த வீரனும், மனுவின் குலத்தை விளங்கச் செய்தவனுமாய் சரணமடைவதற்கு புகலிடமான விஷ்ணுவை பரம ஹம்ஸனாய் எல்லா ஆகமங்களிலேயும் அறியத்தக்கவனாய், வேத சிகரங்களான உபனிஷத்துக்களில் நன்றாக அறிவிக்கப் பெற்றவனுமான ஸ்ரீ ராமனை பஜிப்பாய்.*

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் குரோதி ஸம்வத்ஸர (2024) சாதுர்மாஸ்ய விஸ்வரூப யாத்திரை

ஸ்ரீகுருபாத ரேணு.

1. 2533 ஆண்டுகட்கு முன்னர், ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர்களால் (509-477 B.C) ஸ்தாபிக்கப்பட்டதான மூலாம்நாய காமகோடிபீடம் சம்ஸ்தானம் எனும் உலக ப்ரசித்தியான இப்பீடத்தின் குருவரவர்கள், ஆண்டுதோறும் குரு பூர்ணிமாவன்று ஜகத்குருவான க்ருஷ்ண பரமாத்மா, வ்யாஸசார்யாள், குரு பரம்பரையினர் என்று பீடத்தின் அனைத்து குருவரர்களையும் முறையாகப் பூஜித்து தமது சாதுர்மாஸ்ய விரதத்தினை தொடங்குவர். இவ்வாண்டு விரத கால தொடக்கமே, சற்றே வித்யாசமாகவும் விசேஷமாகவும் இருந்தது. பரம பூஜனீயர்களும் ஸ்ரீமடத்தின் 70 ஆவது பீடாதிபதியுமான பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தமது இராமேஸ்வர யாத்திரையினை முடித்துக் கொண்டு இளையாத்தங்குடியில் 65 வது பீடாதிபதிகளின் அதிஷ்டானத்தை தரிசித்துக் கொண்டு திருவானைக்கா திரும்பி, ஸ்ரீமடத்தில் தங்கி வ்யாஸ பூஜையினை வெகு விமர்சையாகவும் மிகுந்த உத்ஸாகத்துடனும் கொண்டாடி முடித்தார்கள். தமது யாத்திரையினைத் தொடர்ந்து ஓரிக்கை கிராமத்தினை அடைந்தும், 25-7-24 அன்று குறிப்பிட்ட காலத்திற்குள், **'சர்வதந்த்ர- ஸ்வதந்தரதியே நம:'** எனும் ஆச்சார்யாள் அர்ச்சனா நாமத்திற்கேற்ப தமது சாதுர்மாஸ்ய விரதத்தினை தொடங்கிட, சங்கல்பம் செய்து கொண்டார்கள்.

2. காஞ்சித் திரிவேணி எனும் காமகோடி பீடத்தின் 68, 69 மற்றும் 70 ஆவது பீடாதிபதிகள் பொற்பாதங்கள் பட்டு அவர்களது பாத தூளிகள் நிறைந்ததுமானதும், மூன்று பெரியவர்களும் முன்னர் சாதுர்மாஸ்ய விரதம் மேற்கொண்ட தும், 1990 களில் நடமாடும் தெய்வமெ ன்று அனைத்து மக்களாலும் போற்றப்படும் ஸ்ரீபரமாச்சார்யர்கள் வெகு காலம் எளிமையான குடிலில் தங்கி தவமிருந்த இடமுமான ஓரிக்கை கிராமத்தில் 5வது முறையாக, பூஜனீயர்கள் விரதங்களை மேற்கொண்டார்கள் என்பதே ஒரு விசேஷம்தான். விரத நாட்களில் தேவேந்திர சபையோ, காமாட்சி அம்பாளின் மனோன்மணி சபையோ என்று வியக்கத்தக்க வகையில் விழாக்கோலம் கொண்டு வேத விற்பன்னர்களும்,

கலைஞர்களும், கவிஞர்களும் பங்கேற்ற சதஸ்கள் பற்றியும் விவரங்கள் நிறைந்த கட்டுரை தனியே தரப்பட உள்ளது. இங்கே விஸ்வரூப யாத்திரை பற்றி முழு விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

3. தமது கருணை நிறைந்த கடாக்ஷத்தினாலும் சங்கல்பத்தினாலும், முத்துக் குளிக்காமலேயே, நல்ல சிப்பிகளை மேலே கொணர்ந்து, அரிய பல நன்முத்துகளைத் தேர்ந்து, அவற்றை மாலையாகக் கோர்த்து சற்றும் திகட்டாது காண்போர் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய கருத்தோவியமாக தர வல்லதாக இந்த ஆண்டு விஸ்வரூப யாத்திரை அமைந்திட திருவுள்ளம் கொண்ட பூஜ்யஸ்ரீ பெரியவா, சாதுர்மாஸ்ய விரதம் ஆரம்பித்த இரண்டொரு நாட்களிலேயே, அதாவது 60 நாட்களுக்கு முன்பாகவே விஸ்வரூப யத்திரையைத் திட்டமிட தொடங்கினார்கள். தேவபுருஷன் விஸ்வகர்மாவின் அம்ஸமோ இவர் என வியக்க வைக்கிற அளவுக்கு, இந்த ஆண்டு யாத்திரை எப்படி அமைய வேண்டும், எத்தனை பேர்கள், என்னென்ன கலை அம்சங்கள், பள்ளி, கல்லூரி, பல்கலை மாணவர்கள், எத்தனை குழுக்கள், வழி நடத்துவோர், என்னென்ன வேத வாக்கியங்கள், நீதிநெறி வாக்கியங்கள், இலக்கிய, புராண, காவிய வாசகங்கள், அவற்றை கற்போர், கற்பிப்போர் மற்றும் சொற்றொடர்கள் எந்த அளவு பலகை அல்லது பதாகைகளில் எழுதி ஊர்வலத்தில் எந்த பகுதியில் இவற்றை மாணவ மாணவியர் தாங்கி வரவேணும் என்பது முதற்கொண்டு தாமே வடிவமைத்து தந்தார்கள். வேதம் ஓதிவரும் வேதியர், சஹஸ்ரநாமம் சொல்லிவரும் ஆண்கள், பெண்கள், சிறுமியர் கோலாட்டம், கிராமியக் கலைகளை இன்றைக்கும் காத்துவரும் ஆடவர், பெண்டிர் ஆகியோரின் கிராமிய நடன நாட்டிய கலைஞர்கள், சிலம்பாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் கற்ற கலைஞர்கள், பழங்குடியினர்களின் பரம்பரை நடனங்கள், நாட்டுப்புற பாடகர்கள், பஜனை குழுவினர், தவில் மற்றும் நாதஸ்வர கலைஞர்கள், சிவா, விஷ்ணு ஆலயங்களில் உள்ள நன்கு அலங்கரிக்கப்பட்ட உற்சவ மூர்த்திகள், அவற்றைத் தாங்கி வர ரதங்கள் என்று தேவையான குழுக்களை அமைக்கச் சொன்னார்கள். சங்கரா கலைக் கல்லூரியின் முதல்வர் ஸ்ரீ வெங்கடேசன், தமது கல்லூரியின் தகுந்த ஆசிரியர் பெருமக்கள் மாணவர்கள் என்று பல்துறை கலைஞர்களை ஒருங்கிணைத்து சிறப்பாக பயிற்சி அளித்து ஊர்வலத்திற்கு அழைத்து வரச் செய்து, அவர்களும் எதிர்பார்த்தபடி மிகச் சிறப்பாக தம் தம் பங்களிப்பினைச் செய்தனர்.

4. ஓரிக்கை மணி மண்டபத்தில் மாலை 5.15 மணிக்கு, வேத முழக்கத்துடனும் மேளதாளத்துடனும், தாரை தப்பட்டையும், கொம்பும் குழலும் ஓங்கி ஒலிக்க, முன்னும் பின்னும் பக்தகோடிகள் புடை சூழ, இளஞ் சூரிய காந்தியுடன் முழுநிலவை ஒத்த புன்னகை நிரம்பிய திருமுக மண்டலத்துடன், சங்கை ஒத்த கழுத்தில் ஸ்வர்ண பூண் கொண்ட ருத்ராக்ஷ மணி மாலைகளுடனும் பாதக் குறடு சற்றே ஒலிக்க, நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையுடனும் பூஜ்யஸ்ரீ பெரியவர்கள், தமது விஸ்வரூப யாத்திரையினை தொடங்கினார்கள். வழி நெடுகிலும் சாலையின் ஒரு பகுதியில் அந்தந்த பகுதி மகளிர், ஸ்ரீ பெரியவர்களை வரவேற்கும் விதமாக, வண்ண வண்ண கோலங்கள் இட்டிருந்தனர். சற்று தொலைவிலிருக்கும் மைதானத்தில், ஸ்ரீ பெரியவாள் சிறப்பாக அமைக்கப்பட்ட மேடையில் அமர்ந்து ஊர்வலத்தின் ஒரு பகுதியான ஷண்மதங்களையும் குறிக்கும் வகையில், சைவ, சாக்த, காணபத்திய, கௌமார, சௌர மற்றும் வைணவ கோவில்களின், உற்சவ மூர்த்திகள் தாங்கிய மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ரதங்கள் வரிசையாக வருவதையும் அவற்றிற்கு முன்னும் பின்னும் நாட்டுப்புற கலைஞர்கள், பஜனை குழுவினர், ஓதுவார் மூர்த்திகள் என்று அவரவர் பங்களிப்பை சிறப்பாக செய்திட, ஊர்வலம் மெதுவே நகர்ந்தது. ஓர் பகுதியை பார்வையிட்டதும், அவர்களுக்கென தயாராய் இருந்த அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் ஸ்ரீபெரியவாள், ஆரோபிக்க சுற்றிலும் பக்தர்கள் நடந்து வர ஊர்வலம் சற்றே வேகம் பிடித்தது. ஏறத்தாழ 5 கி.மீ தூரத்திற்கு வழி நெடுகிலும் பொதுமக்கள் காத்திருந்து, தாம் கற்ற கலைகளையும் அவற்றை திறமையுடன் வெளிப்படுத்திய கலைஞர்களையும் கண்டு ரசிக்கும் போதே, பூஜ்யஸ்ரீ பெரியவாளையும் தர்சனம் செய்து கொண்டார்கள். கைவண்ணமும் கலைநயமும் மிக்க மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளாலும், கிராமிய கலைஞர்களாலும் நிரம்பிய சாலையானது, சிலப்பதிகாரத்தில், பூம்புகார் காண்டத்தில், இந்திர விழா நடைபெறுகிற சாலைகள் வணிகர்களாலும், தனிகர்களாலும், ரசிகர்களாலும் நிறைந்து இருந்த நிலையை வர்ணிப்பதை ஒத்ததாக இருந்தது. சாலையே ராஜபாட்டையாகத் தெரிந்தது. ஆங்காங்கே வழி நெடுக, தனிகர்களும், வணிகர்களும் அளித்த ஆளுயுர மாலை, மரியாதைகளை விகசித்த முகத்துடனும் கருணை பொழியும் கண்களுடனும் ஏற்றுக் கொண்டதும், மரியாதை செய்தவர்ளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியினைக் கண்டு ஸ்ரீபெரியவர்களின் திருமுக மண்டலம் இன்னும் அதிகமாக ப்ரகாசித்தது. இப்படி சுற்றிலும் ஆயிர

கணக்கான கண்கள் மொய்க்க பக்தர்களும் ஸ்வாமிகளும் பரஸ்பரம் அன்பும் பக்தியும் கெழுமி நின்றது ஸ்ரீபெரியவாளின் சௌலப்யத்தையும் அவர்கள்பால் பக்தர்களின் வாத்சல்யத்தையும் முழுமையாக வெளிப்படுத்தியது நிஜம்.

5. ஆங்காங்கே சாலையின் இரு மருங்கிலும் மாணவிகளின் இதிகாச, புராண, காவ்ய நாடக, நாட்டியங்கள், சிலம்பாட்டங்கள் என்று கலை மணம் கமழ ஊர்வலம் தொடர்ந்தது. ஊர்வலத்தை திட்டமிடும்போதே, கோவில் தீவட்டி தாங்கிகள் வரவேண்டும் என ஸ்ரீஸ்வாமிகள் கருத்துத் தெரிவித்தார்கள். அது எத்தகைய கலை என்பதை தீவட்டிதாங்கிகள், தீவட்டிகளை சக்ரவடிவில் சுழற்றி அடித்தும் குறுக்கிலும் நெடுக்கிலும் மிகுந்த தைர்யத்துடன் தீ பந்தங்களை மிகக் கவனமாகவும் திறமையாகக் கையாண்டு, வித்தைகள் செய்வதை பார்த்த பிறகு தான் இது ஒரு வீரமிக்க கலை என்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் மிகப் பெரிய ரசிகர் என்பதையும் மக்கள் அறிந்து கொண்டனர் என்பது ஊர்வலத்தின் போதே பொதுமக்களில் பலர் ஊர்வலத்தின் சிறப்பை தகுந்த வார்த்தைகளால் பேசிக் கொண்டதினால் தெரிந்தது. உயர்வான கலை உணர்வுடன் அனைவரையும் ஒருங்கிணைத்து, கருமமே கண்ணாக இருந்து, பயிற்சிகள் அளித்து மிகச் சிறப்பான ஊர்வலத்திற்கு தலைமை பொறுப்பேற்று நடத்திய கல்லூரி முதல்வர் ஸ்ரீ வெங்கடேசன் அவர்களை ஸ்ரீ பெரியவாள் முதல், சிறப்பு விருந்தினர் மும்பை ஸ்ரீ சங்கர் முதலானோர் வெகுவாக பாராட்டி சால்வையும் தங்கச் சங்கிலியும் பரிசளித்து கௌரவித்தார்கள். ஸ்ரீ மடம் ஸ்ரீ கார்யம் ஏஜெண்ட் ஸ்ரீ செல்லா விச்வநாத சாஸ்த்ரி மிகச்சிறப்பாக அனைத்தையும் ஒருங்கிணைத்து நடத்தி கொடுத்தார்கள். ஸ்ரீ பெரியவாளுடன் ஸ்ரீ மட ஸம்ப்ரதாயபடி தண்டி ஸந்யாஸிகளும் கலந்து கொண்டார்கள். ஸ்ரீகாமாக்ஷி ஆலயத்தில் வஸந்த மண்டபத்தில் இரவு 12 மணிக்கு பகவத்கீதை 11ம் அத்யாயம் விச்வரூப தர்சனயோக ஸர்கத்தை ஸ்ரீ பெரியவாள் அனுபவித்து பாராயணம் செய்தது அனைவரையும் மெய்மறக்க செய்தது. இரவு நேரத்தையும் பொருட்படுத்தாது ஆயிரக் கணக்கான பக்தர்கள் ஸ்ரீ பெரியவாளின் உரையையும், அவர்கள் மிகவும் அனுபவித்து வாசித்த கீதா வாக்கியங்களை ரசித்து கேட்டதையும் மறக்கவியலாது. ஸ்ரீமடம் தொண்டர்கள் மற்றும் ஸ்ரீ பெரியவா அணுக்கத் தொண்டர்களின் அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்திட்ட சேவைகளை இங்கு சிறப்பாக குறிப்பிட வேண்டும்.

6. மொத்தத்தில், இந்த அற்புதமான, கலை நயமிக்க, மிகப் பெரிய ஊர்வலத்தின் வழி மக்களுக்கு ஸ்ரீபெரியவர்கள் சொல்லும் செய்தி என்ன? ஆய கலைகள் அறுபத்தினாலும் அதற்கு மேலும் உள்ள அனைத்து கலைகளும் சனாதன தர்மத்தின் அங்கங்களே. அனைத்துமே தெய்வீகக் கலைகள். ‘செய்யும் தொழிலே தெய்வம்; அதில் திறமைதான் நமது செல்வம்’, என்று கலைஞர்கள் அனைவருமே அவரவர் தொழிலில் கை தேர்ந்து அதன் வழி தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டு வாழ்வின் பயனை அடைய இயலும், என்பதாம். எத்தொழிலானாலும், யாரும் அதில் நிபுணத்துவம் பெற்று அத் தொழிலில் உள்ள தெய்வாம்சத்தை உணர இயலும். (Dignity of Labour) ‘கலைகளை போற்றுவோம்; கலைஞர்களை போஷிப்போம்’ என்பதே பூஜனீயர்களின் சொல்லும் செயலும்.

7. அற்புதமான இந்த ஊர்வலம் 5 கி.மீ. தூரத்தை 5 மணி நேரத்தில் கடந்து, இரவு சுமார் 11 மணி அளவில் காமாட்சி கோவில் வஸந்த மண்டபத்தை அடைந்தது. கோவில் வாசலில் கோவில் ஸ்ரீகார்யம் ஸ்ரீசுந்தரேச ஐயர் தலைமையில் கோவில் ஸ்தானிகர்கள் வெகு விமரிசையாக பூர்ணகும்பம் முதலான உபசாரங்களுடன் வரவேற்று வசந்த மண்டபத்தின் மேல்புற மேடையில் அமர வைத்தனர். பல்வேறு கோவில்களின் மரியாதைகளை ஏற்றுக் கொண்டார்கள். அத்தனை நேர பயணத்தின் முடிவில், களைப்பேதுமிலாது, வழக்கமான புன்முறுவலுடன் மிகுந்த உற்சாகத்துடன் உரத்த குரலில், தனது அனுக்ரஹபாஷணத்தை தொடங்கினார்கள். நம் ஸ்வாமிகள், ஜகத்குரு அல்லவா? ஜகம் முழுவதும் எதிரொலிக்க ஜகன்நாயகி காமாக்ஷி அம்பாள் சன்னிதியில் எழுப்பப்பட்டதானதொரு சிம்ம கர்ஜனை. காலத்திற்கேற்ற கர்ஜனை. ஒருபோதும் அழிவிலாத சனாதன தர்மத்தின், நமது கலாச்சார பாரம்பரியத்தின் அருமை பெருமைகளை நன்கு அறிந்தும் அறியாது போல் இருப்போருக்கும், மறுப்போர்க்கும், மறந்தவர்களுக்கும் மீண்டும் நினைவூட்டும் வகையிலும் அடுத்த தலைமுறையினருக்கு அவரவர் தர்மத்தை விள்ளாது விரியாது உள்ளது உள்ளவாறு எடுத்துச் சொல்லும் அற்புத உரை. அதன் முக்கிய பகுதிகளை Highlights ஐ கீழே காண்க.

# க்ரோதி வருஷ சாதுர்மாஸ்ய வ்ரத பூர்த்தி விஸ்வரூப யாத்ரா அனுக்ரஹ பாஷணம் (2024)

(Highlights)

1. நகரேஷு காஞ்சி என்று போற்றப்படுகின்ற காஞ்சி மாநகரத்தில் ப்ராசீனமான கோவில்களும், சக்தி பீடத்தில் ஒன்றான காமாக்ஷி அம்பாள் சன்னிதி ஓட்யான பீட நிலையமாகவும் இருந்து வருகிறது.

2. இன்று பல்வேறு காரணங்களினால் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் நம் பாரத தேசத்திலிருந்து பிரிக்கப்பட்டிருந்தாலும், 51 சக்தி பீடங்கள் வரிசையில் இருக்கக்கூடிய சில கோவில்கள் அங்கே இருப்பதாலும், ஸப்த நதிகளில் ஒன்றான சிந்து நதி அங்கும் இருப்பதாலும் நிர்வாக ரீதியாக தேசங்களாகப் பிரிந்திருந்தாலும் சமயரீதியால் நம்முடைய போற்றுதலுக்கு உரியவையாக அவை உள்ளன. சிந்து, காவேரி கலாசார ரீதியாக இணைத்துப் பார்க்க வேண்டும்.

3. நம்முடைய ஸனாதன தர்மம் பூகோள, சரித்ர ரீதியிலேயும் மிகப் பரந்த சமயமாக இருந்திருக்கிறது. நம்முடைய பாரத தேசத்தில் ஹிந்து சமயத்தை பலப்படுத்தாவிட்டால் மற்ற தேசத்திலுள்ள ஹிந்துக்கள் பலமாக வாழ்வது கடினமான விஷயம்.

4. ஆகவே மற்ற இடத்திலே வசிக்கும் ஹிந்துக்களுக்காக நாம் அனைவரும் மொழியால் வேறுபட்டாலும் ஹிந்துக்கள் என்று ஒருங்கிணைந்து கோவில்களைப் பராமரித்து, பூஜா முறைகள், விக்ரஹ ஆராதனை செய்வது, இங்கே அத்தி வரதர், அங்கே பூரி ஜகந்நாதர் மரத்தால் செய்யப்பட்ட விக்ரஹங்கள், அது போல அங்கே கோவர்த்தன மலை, இங்கே திருவண்ணாமலை ஆகிய மலைகளை வணங்கி பரிக்ரமா செய்வது, நம்முடைய பரம்பரை வழக்கம் ஞானம், பக்தி, பிறருக்கு உதவும் பரந்த மனப்பான்மை கொண்டது நம் பரம்பரை.

5. உபவாஸம், நோன்பு, ஜபம் இவைகள் நம்முடையவை என்று நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நம்முடைய அன்பு, பரந்த மனப்பான்மை காரணமாக வரலாற்று அடிப்படையிலே அனைவருமே நம்மை சார்ந்தவர்கள். ஆகவே இந்த பாரத தேசத்திலே ஆரம்பத்திலிருந்தே இருக்கக்கூடிய ஒரே சமயம் ஸனாதன வைதிக ஹிந்து தர்மம். ஒவ்வொரு குடும்பத்திலும் ஸநாதன தர்மத்தில் சொல்லப்பட்டுள்ள

ஸம்ஸ்காரங்களை முறையாக செய்து வரவேண்டும். ஹிந்து சமயம் என்பது ஒரு சமுதாயம் ; ஒரு அறிவியல்; ஒரு பக்தி. அதை அனைவரும் நேசிக்க வேண்டும்.

6. தெய்வத்தை ஆகர்ஷணம் செய்தவர்கள் காஞ்சி பெரியவர்கள். சமுதாய மக்களை ஆகர்ஷணம் செய்தவர்கள் காஞ்சி புதுப் பெரியவர்கள். அதன்மூலம் அனைத்து மக்களும் திலக தாரணம், பஜனை செய்வது, கோலம் போடுவது போன்ற சிறிய சிறிய வழிபாட்டு முறைகளை கடைபிடிக்க வழி செய்தார்கள். சமயமும் சமுதாயத்தை முன்னேற்றமடைய செய்கிறது என்பதை மக்களிடம் கொண்டு சென்று அனைவரும் சேவை செய்ய வேண்டும் என்ற கருத்தினை தன்னுடைய செயல்பாட்டின் மூலம் உணர்த்தினார்கள். அந்த இரு பெரியவர்களின் ஆசிகளுடன் அவர்கள் சஞ்சாரம் செய்த காஞ்சி மாநகரும், அதைச் சுற்றியுள்ள க்ராமங்களும் பயன்பெறும் வகையில் பள்ளிகள், ஆஸ்பத்திரிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம் ஆகியவற்றை ஏற்படுத்தி காஞ்சி தன்னுடைய பழைய பெருமையை, பொலிவை பெறுவதற்கு, அருளையும், பொருளையும் வழங்கினார்கள். இன்னும் தொடர்ந்து நாம் செய்ய வேண்டிய பணிகள் இருக்கின்றன.

7. இந்த வருஷம் சாதுர்மாஸ்யம் ராமேஸ்வரத்தில் ராமநாத ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து, திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி அம்மனை தரிசித்து, அங்கேயே வ்யாஸ பூஜை செய்து, இங்கு ஓரிக்கையில் சாதுர்மாஸ்ய விரதம் மேற்கொண்டு பாலாற்றங்கரையிலே திருப்பதியில் நடைபெறும் அனைத்து உத்ஸவங்கள் போலே தினமும் அன்னதானங்கள், கச்சேரிகள், ஸபைகள், ப்ரசங்கங்கள், பாராயணங்கள் என்று பலவிதமான ஸதஸ்ஸுகள் நடைபெற்றன. இந்த ஸதஸ்ஸுகளின் மூலம் ஹிந்து சமயத்தை எப்படி வளர்த்து, பாதுகாத்து, விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பதற்கான வலுவான அடித்தளம் அமைப்பதாக இருந்தன. இத்தகைய பெருமைபெற்ற சாதுர்மாஸ்ய நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது. நாம் அனைவரும் ஹிந்துக்கள் என்று குழந்தைகள் முதல் பெரியவர் வரை நினைக்கும் விதமாக நமது சமய கலாசாரத்தில் நம்பிக்கை உள்ள அனைத்து கலைஞர்களும், பண்டிதர்களும் பாமரர்களும் மிகப்பெரிய அளவில் பங்கேற்ற ஊர்வலம் இங்கே கோவில் வாசலில் சிறப்பாக நிறைவு பெற்றது. அனைவருக்கும் ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் அருள் கிடைக்க அம்பாளைப் ப்ரார்த்திக்கிறோம்.

8. அறுபது வருஷங்களுக்கு முன் மைலாப்பூரில் சங்கரா - ஷண்மதா என்று ஒரு கருத்தரங்கு ஸ்ரீபெரியவர்கள் நடத்தினார்கள். அதுபோல பாமரர்களும் அறிந்து

கொள்ளும் விதமாக இன்று விழாவில் பிள்ளையார் முதல் ஷண்முகர் வரை உள்ள ஆறு ரதங்கள் மற்றும் ஒளி விளக்குகளால் கீதோபதேச ரதம் எல்லாம் சிறப்பாக செய்திருந்தார்கள். நமது கலாச்சாரம், நமது காஞ்சி, நமது பெருமை என்பதை உணர்த்தும் விதமாக இன்றைய விழாவை காஞ்சி மாநகர வரவேற்புக் குழு நடத்தி இருக்கிறார்கள்.

9. நாம் உலகாயதமான பார்வையை விட்டு உலகத்தைக் பார்க்கும் பார்வை, விசாலமான பார்வை நமக்குத் தேவை. தர்மம் என்பது ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் வலுப்பெற வேண்டும். நூதனமான விஞ்ஞானத்தோடு நமது கலைகளையும், கலாச்சாரத்தையும் பேணிக் காத்து அனைத்து விதத்திலும் வலுவுள்ள நாடாக நமது பாரத தேசம் விளங்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

10. அக்டோபர் 20ம் தேதி காசி மக்கள் பயன்பெறும் விதமாக சங்கரா ஐ ஹாஸ்பிடல் காசியில் 140 கோடி செலவில் தொடங்க இருக்கிறது.

11. நம் கோவில்கள் அமைதி, ஆனந்தம், அபிவ்ருத்தியை அளிக்கக்கூடிய ஆலயங்களாக வளர்வதற்கு அந்த காமாக்ஷி அம்பாளைப் ப்ரார்த்திப்போமாக.

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி**

**வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.**

(குறள் : 226)

உணவைத் தேடி பலவீனனாக அலைபவனுக்கு யார் உடனடியாக உணவைக் கொடுக்கிறானோ, அவன் வள்ளல் ஆகிறான். அவனுக்கு ஏராளமான வெகுமதிகள் காத்திருக்கின்றன. விதையை விதைக்காமல் எதுவும் முளைப்பது கிடையாது. தானம் என்ற விதையின் பலன் மிகப் பெரியது. இப்பிறவியில் ஒருவன் எவ்வளவுக்கு எவ்வளவு மற்றவர்களுக்கு உதவுகிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அந்த வினை அடுத்த பிறவியில் அவனுக்குப் பலனைத் தருகிறது.

# விஸ்வரூப யாத்திரை கொண்டாட்டங்கள்












மறைமலைநகர்
பிராமணர்கள் சங்கம்
வேத பாரதி





















# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி

**ஆகஸ்ட்** 19 - பங்களாதேஷில் அமைதி திரும்ப அருளாசி வழங்கினார்கள்.

**ஆகஸ்ட்** 21 - ஓரிக்கை முகாமில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளை தொடர்ந்து பக்தர்களுக்கு அனுக்ரஹ பாஷணம் அளித்தருளினார்கள்.



**ஆகஸ்ட்** 26 - ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி கோகுலாஷ்டமி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பகவான் மஹாவிஷ்ணுவின் அவதாரங்களில் முக்கியமான சிறப்பான அவதாரங்களில் ஒன்றாக கருதப்படுவது கிருஷ்ணாவதாரம். உலகை ரக்ஷிக்க பகவான் நடத்திய லீலா விநோதங்கள் கிருஷ்ணாவதாரத்தில் மட்டுமே. கருணைக் கடலில் அவர்தம் அருளாசிகளை பெற தகுதியுடைவர்களாவோம். அதற்கான வழிகளாக விநயம், விஸ்வாசம், விவேகம் மற்றும் அறம் செய்ய விரும்பு போன்ற எண்ணங்கள் மற்றும் இளமையில் கல் போன்றவை நமக்கு வழிகாட்டும். பக்தியில் கட்டுண்ட பக்தர்களுக்கு அவர்தம் எண்ணங்களுக்கு ஏற்ப பகவான் அனுக்ரஹமளிப்பார். நாம் நமது தேசம் முன்னேற்றத்திற்காக முயற்சிக்க பகவானை பிரார்த்திப்போமாக என அருளிச்செய்தார்கள்.

**ஆகஸ்ட்** 30 - முகாமில் பல்வேறு நிகழ்ச்சிகள் வேத பாராயணம், ஹோமங்கள், சங்கீத உபாசனா ஆகியவைகளின் நிறைவாக பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களிடையே அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள்.

**செப் 1** - பானுவாரத்தை முன்னிட்டு சூர்ய நமஸ்கார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**செப் 5** - ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் ஆக்ஞைபடி புதுடில்லி ஸ்ரீ காஞ்சி காமகோடி கலாசார மையத்தில் செப்டம்பர் 7ம் தேதி கணேச சதுர்த்தியை முன்னிட்டு கணபதி ஹோமம், அபிஷேக அலங்கார அர்ச்சனைகள நடைபெற்றன.

ஸ்ரீமடம் முகாமிலும் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு ஆயிரம் மோதக கணபதி ஹோமம் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் முன்னிலையில் நடைபெற்றது. தொடர்ந்து 21 விதமான பத்ர புஷ்பங்களைக் கொண்டு விசேஷ பூஜைகளும் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் நடத்தப்பட்டது.

**செப் 8** - பானுவாரத்தை முன்னிட்டு சூர்ய நமஸ்கார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**செப் 9 / 10** - அத்வைத சபா வாக்யார்த்த சதஸ் இரு தினங்கள் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வேத விற்பன்னர்களைக் கொண்டு நடைபெற்றது. நிறைவாக பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள்.

விசேஷமான பாத்ரபத மாதத்தில் குஜராத் மாநிலத்தில் உள்ள அம்பாஜி மாதா திருக்கோவில் செல்லும் வழியில் எக்கவான் சக்திபீட திருக்கோவில் காஞ்சி காமகோடிபீட ஜகத்குரு சங்கராசார்யர்களால் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டதாகும். இத்திருக்கோவில் 51 சக்திபீட தேவியர்களின் சந்நிதிகளும் ஒருங்கே அமையப்பட்டதாகும். பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் அருளாசியின்படி அம்பாஜி மாதா திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்குமிடமும், போஜனமும் நடைபெற ஏற்பாடுகள செய்யப்பட்டுள்ளன.

**செப் 10** - ஓரிக்கை பூஜ்ய ஸ்ரீ மஹா சுவாமிகள் மணிமண்டபத்தில் மூன்று நாட்கள் வேத பாஷ்ய சதஸ் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் அருளாசிகளின்படி துவங்கப்பட்டு நடைபெற்றது. இதில் 19 வேத விற்பன்னர்களும், 23 வித்யார்த்திகளும் கலந்து கொண்டார்கள். வேதபாஷ்ய சதஸ் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஷஷ்டியப்த பூர்த்தி டிரஸ்ட் மூலமாக வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

**செப் 13** - ஓரிக்கை பூஜ்ய ஸ்ரீ மஹாஸ்வாமிகள் மணி மண்டபத்தில் ஆயிரம் சுஹாஸினி பூஜை வெகு சிறப்பாக பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் செப்டம்பர் 13, 14 ஆகிய தேதிகளில் நடைபெற்றன. இது சமயம் ப்ரம்ம ஸ்ரீ பரணீதர சாஸ்திரிகளால்

''விவாஹ பிரயோகம்'' எனும் பொருள் குறித்து உபன்யாசமும், தொடர்ந்து ஸ்ரீ மணிகண்ட கணபதி என்பவரால் ''ரிக் வேத ஹோமம் சம்மந்த விஷயம்'' குறித்த விசேஷ சொற்பொழிவும் நடைபெற்றன.

பல்வேறு வழக்கறிஞர்கள் கலந்து கொண்ட வழக்கறிஞர்கள் சங்க கருத்தரங்கு நிகழ்ச்சியும் தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் அனுக்ரஹபாஷணமும் நடைபெற்றது.

**செப் 15** - ஸ்ரீ காமாக்ஷி சௌந்தர்யலஹரி மண்டலியினரால் தேவி பாராயண நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பானுவாரத்தை முன்னிட்டு சூர்ய நமஸ்கார நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் அருளாசிகளுடன் காஞ்சிபுரத்தை ஒட்டியுள்ள நல்லூர் என்னுமிடத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீ சங்கரா செவிலியர் கல்லூரி ஆரம்ப விழாவும் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத்திய அரசு நிதி அமைச்சர் மாண்புமிகு ஸ்ரீமதி நிர்மலா சீத்தாராமன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கல்லூரியை திறந்து வைத்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் பல்வேறு கல்வியாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**செப் 16** - இன்று ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜையினை தொடர்ந்து மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை திருப்பதி திருமலை தேவஸ்தானத்தினரால் ஓரிக்கை பூஜ்ய ஸ்ரீ மஹா சுவாமிகள் மணிமண்டபத்தில் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் முன்னிலையில் வேத சதஸ் நடைபெற்றது.

**செப் 18** - இன்று ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் நித்ய மூன்று கால பூஜைகள் முடித்து சாதுர்மாஸ்ய பூர்த்தி நாளானதால் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் விஸ்வரூப யாத்திரை ஓரிக்கை மணி மண்டபத்திலிருந்து மாலை 4,00 மணிக்கு கோலாகலமாக புறப்பட்டு இரவு 11.00 மணியளவில் காஞ்சிபுரம் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் திருக்கோவிலுக்கு வந்து சேர்ந்தது.

பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் அருளாசிகளின்படி லோக க்ஷேமத்திற்காக புதுடில்லி ஸ்ரீ காமகோடி கலாச்சார மையத்தில் பௌர்ணமியை முன்னிட்டு சண்டி ஹோமமும் அதேபோன்று நெல்லூர் மூலபீடா சங்கரமடத்தில் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர சுவாமி திருக்கோவிலில் சண்டி ஹோமமும் நடைபெற்றது.

# ஐப்பசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| *28-10-2024* | திங்கள் | ஏகாதசி |
| *29-10-2024* | செவ்வாய் | த்வாதசி — ப்ரதோஷ பூஜை |
| *31-10-2024* | வியாழன் | தீபாவளி பண்டிகை |
| *01-11-2024* | வெள்ளி | ஸ்வாதி — வேத பாராயணம் |
| *03-11-2024* | ஞாயிறு | அனுஷம் — தேர் அனுஷம் — வேத பாராயணம் |
| *05-11-2024* | செவ்வாய் | மூலம் — தேர் |
| *06-11-2024* | புதன் | மூலம் — வேத பாராயணம் |
| *07-11-2024* | வியாழன் | உத்ராடம் — தேர் ஸ்கந்த ஷஷ்டி, ஸூரஸம்ஹாரம் |
| *08-11-2024* | வெள்ளி | உத்ராடம் — வேத பாராயணம் |
| *09-11-2024* | சனி | அவிட்டம் -— தேர் |
| *10-11-2024* | ஞாயிறு | அவிட்டம் — வேத பாராயணம் |
| *12-11-2024* | செவ்வாய் | ஏகாதசி |
| *13-11-2024* | புதன் | த்வாதசி — ப்ரதோஷ பூஜை - துளசி விவாஹம் |
| *15-11-2024* | வெள்ளி | அன்னாபிஷேகம் — பௌணர்மி பூஜை |

*18-10-2024; 25-10-2024; 01-11-2024; 08-11-2024; 15-11-2024*

வெள்ளிக்கிழமை பூஜை மாலையில்
ஸ்ரீ மஹாத்ரிபுர சுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வரருக்கு
விசேஷ அபிஷேக, பூஜை

# சாணக்ய ஸுபாஷிதம்

**விடுவதில்லை**

**சின்னோபி சந்தன தருர் ந ஜஹாதி கந்தம்**
**வ்ருத்தோபி வாரணபதிர்ன ஜஹாதி லீலாம்**
**யந்த்ரார்பிதோபி மதுரதாம் ந ஜஹாதி சேக்ஷு:**
**க்ஷீணோபி ந த்யஜதி சீலகுணான் குலீன: ॥**

*வெட்டினாலும் சந்தன மரம் மணத்தை விடாது, வயது ஆனாலும் யானை விளையாட்டை விடாது, கரும்பு யந்த்ரத்தில் இட்டாலும் தன் இனிப்பை விடாது, சான்றோர் இன்னல் வந்தாலும் தன் நிலை பெயரான்.*

**சான்றோன்**

**ப்ரலயே பின்ன மர்யாதா பவந்தி கில ஸாகரா:**
**ஸாகரா பேதமிச்சந்தி ப்ரலயேபி ந ஸாதவ: ॥**

*ப்ரளய காலத்தில் ஸமுத்ரம் தன் நிலை பெயர்ந்து ஊர்களை பேதிக்கும். சான்றோன் அந்த ப்ரளயத்திலும் தன் நிலை பிறழான்.*

**ஸாது**

**யுகாந்தே சலதி மேரு; கல்பாந்தே ஸப்த ஸாகரா:**
**ஸாதவ: ப்ரதிபன்னார்த்தான் ந சலந்தி கதாசன ॥**

*யுக முடிவில் மேரு சலிக்கும். கல்பமுடிவில் ஏழு கடல்களும் சலிக்கும். ஸாதுக்கள் தம் குறிக்கோள் முடியும் வரையில் தளரார்.*

**வெறுப்பு**

**ஆப்த த்வேஷாத் பவேத் ம்ருத்யு:பரத்வேஷாத் தனக்ஷய:**
**ராஜத்வேஷாத் பவேத் நாஸோ ப்ரம்மத்வேஷாத் குலக்ஷய: ॥**

*அண்டியவரை வெறுப்பின் மரணம். அன்னியனை வெறுப்பின் தன நாசம். அரசனை வெறுப்பின் நாசம். ப்ரம்ம த்வேஷத்தால் குலக்ஷயம்.*

**ரகஸ்யம் காத்தல்**

**ந விஸ்வஸேத் குமித்ரே ந மித்ரம் சாபி ந விஸ்வஸேத்**
**கதாசித் குபிதம் மித்ரம் ஸர்வக்ருஹ்யாம் ப்ரகாஸயேத் ॥**

*கெட்ட நண்பனை நம்பாதே. நல்ல நண்பனையும் அதிகமாக நம்பாதே. கோபம்வரின் நல்ல நண்பன் உன் ரகசியங்களை வெளியே சொல்லி விடுவான்.*

**சொல்லத் தகாதவை**

**அர்த நாசம் மனஸ்தாபம் க்ருஹே துச்சரிதானி ச**
**வஞ்சனம் சாபமானம் ச மதிமான் ந ப்ரகாசயேத் ॥**

*தனமில்லாமை, வீட்டில் மனஸ்தாபம், கெட்ட நடவடிக்கைகள், ஏமாறுதல், அவமானம் இவைகளை புத்தியுள்ளவன் வெளியில் சொல்லக் கூடாது.*

**ஸுசித்தமௌஷதம் தர்மம் க்ருஹசித்ரம் ச மைதுனம்**
**குபுக்தம் குஸ்ருதம் சைவ மதிமான் ந ப்ரகாஸயேத் ॥**

*நல்ல மருந்து, வீட்டுச் சடங்கு, வீட்டு மனஸ்தாபம், குபோஜனம், ஸம்போகம் இவைகளை புத்திமான் வெளியே சொல்லக் கூடாது.*

**அதி நேர்மை**

**நாத்யந்த ஸரலைர் பாவ்யம் கத்வா பஸ்ய வனஸ்தலீம்**
**சித்யந்தே ஸரலாஸ்தத்ர குப்ஜாஸ்திஷ்டந்தி பாதபா: ॥**

*வளைந்து கொடுக்காமல் நேராக இருக்க வேண்டாம். வனஸ்தலியைப் போய் பார். நெடிய மரங்கள் வெட்டப்படும். வளைந்து நிற்கும் மரங்கள் வெட்டப்படா.*

**விட்டு விடு**

**த்யஜேதேகம் குலஸ்யார்தே க்ராமஸ்யார்தே குலம் த்யஜேத்**
**க்ராமம் ஜனபதஸ்யார்தே ஆத்மார்தே ப்ருத்வீம் த்யஜேத் ॥**

*குலத்திற்காக ஒருவனையும், ஒரு க்ராமத்திற்காக குலத்தையும், ஜனபததிற்காக க்ராமத்தையும், ஆத்ம லாபத்திற்காக உலகையும் விட்டு விடு.*

*(தொடரும்)*

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் ஜிஹ்மாதிதோஷவிதூராய வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ந யேஷு ஜிஹ்மம் மாயா ந வித்யதே ஸாதகேஷு வை ।**

**நூனம் தேஷாம் ப்ரஹ்மலோக: இதி வேதாந்தபாஸ்கர: ।।**

எவரிடம் நேர்மையில்லாமை, கபடம் இருப்பதில்லையோ அவருக்கு பிரம்மலோகம் கிடைக்கிறது.

## 33. உபாசனைக்கு மூன்று தடைகள்

**தேஷாமஸௌ விரஜோ ப்ரஹ்மலோகோ ந யேஷு**

**ஜிஹ்மம் அன்ருதம் ந மாயா சேதி ।**

**ப்ரச்னோபநிஷத் 1-16**

*யாரிடம் நேர்மையில்லாமை, பொய், கபடம் என்கிற தோஷங்கள் இல்லையோ அப்படிப்பட்டவர்களுக்கு சுத்தமாகிய பிரம்மலோகம் கிடைக்கிறது.*

உபாசகர்களுக்கு மரணத்தின் பிறகு அந்தந்த தேவதைகளின் லோகம் கிடைக்கிறது. அதன்பிறகு அந்தந்த தேவதைகளின் பதவியே கிடைக்கிறது. ஹிரண்ய கர்ப்ப உபாசனை செய்யக் கூடியவருக்கு மரணத்தின் பிறகு பிரம்மலோகம் கிடைக்கிறது. உபாசகர்களுக்கு, தவம், இந்திரிய நிக்ரஹம் மற்றும் உபாசனையில் நிஷ்டை அவசியம் இருக்க வேண்டும். உபாசனையில் பக்குவம் அடையாததற்கும் மேலும் அது பலனைக் கொடுக்காததற்கும் மூன்று தோஷங்கள் காரணமாகும். அவைகள் தான் ஜிஹ்மம், அன்ருதம், மற்றும் மாயா என்பவை. ஜிஹ்ம என்றால் நேர்மையற்றதும், ஏமாற்றக் கூடியதுமான பேச்சுக்களைப் பேசுவது.

அன்ருதம் என்றால் சுய லாபத்திற்காக பொய் சொல்வது. மாயா என்றால் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது. இந்த மூன்று தோஷங்களை விட்டவனுக்கு பிரம்ம லோகம் கிடைக்கிறது.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# அதர்வண வேத ப்ருத்வீ ஸூக்தம் 3

## விஸ்வ கீதம்

கனல் அணியும் கரும் அங்கமுள்ள ஜகத் என்னை கூர்மையாகவும் ப்ரகாச மானவனாகவும் செய்வானாக.

இந்த பூமியிலே நலம் தரும் அவியையும், யக்ஞத்தையும் மானிடர்கள் தேவர்களுக்கு அளிக்கிறார்கள். நரர்கள் மாநிலத்தில் ஸ்வதாவினாலும், உணவினாலும் ஜீவிக்கிறார்கள். அந்த இப்புவி எமக்கு ப்ராணனையும் ஆயுளையும் தருக. மூப்பான வயதையும் தருக.

குவலயமே உன்னிடத்தில் தான் எத்தனை கந்தங்கள். எத்தனை ஓஷதிகள். அவைகளை கந்தர்வர்களும், அப்சரஸுகளும் பகிர்ந்து கொண்டனர். அந்த கந்தங்களால் எம்மை ஸுகந்தமாக்கு. எம்மை யாரும் வெறுக்க வேண்டாம்.

உனது கமலத்தில் எக்கந்தம் நுழைந்ததோ, சூர்யையின் மணத்திற்கு எந்த கந்தத்தை கொண்டு வந்தனரோ அகிலமே! அமுதர்கள் எந்த கந்தத்தை ஆதியில் தரித்தனரோ அதனால் என்னை சுகந்தனாக்கு. எம்மை யாரும் வெறுக்க வேண்டாம்.

தரணியே ! புருஷர்களில், ஸ்த்ரீகளில் உனது வாஸனை உண்டு. ஒளியும், உயர்வும் மைந்தர்களில் உண்டு. குதிரைகளில், வீரர்களில், மிருகங்களில், யானைகளில் மேன்மை உண்டு. சிறு பெண்களில் ப்ரகாசமுண்டு. அவைகளுடன் எம்மைச் சேர்த்துவிடு. எம்மை எவனும் வெறுக்க வேண்டாம்.

கல்லும் புவிதான், தூசியும் புவிதான். இப்பூமி தரிக்கப்பட்டு ஸ்திரமாயுள்ளது. பொன் முதுகுள்ள இந்த பூதலத்திற்கு என் வணக்கங்கள்.

வனஸ்பதிகளும், வானஸ்பத்யங்களும் எவளில் ஸதாகாலம் ஸ்திரமாய் நிற்கின்றனவோ அவைகளைத் தரிக்கும் தரணியை நாங்கள் ஓதுகிறோம்.

பூமித்தாயே ! நாங்கள் எழும் போதும், உட்காரும் போதும், நிற்கும் போதும், இடது, வலது கால்களால் தாண்டும்போதும், தட்டுத் தடுமாறாமல் இருக்க வேண்டும்.

(தொடரும்)

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 25

## ஸ்ரீ ஆனந்தானுபவர்

அத்வைத வேதாந்த உலகிற்கு மூன்று அரிய பெரிய நூல்களை அருளிய பெருமை இவருக்கு உண்டு. ஸ்ரீ விமுக்தாத்மரின் 'இஷ்ட ஸித்தி' எனும் நூலுக்கு 'இஷ்ட ஸித்தி விவரணம்' என்ற உரை எழுதியுள்ளார். 'நியாயரத்ன தீபாவளி', 'பதார்த்த தத்வ நிர்ணயம்' என்ற இருநூல்கள் இவரால் ஸ்வதந்திரமாக எழுதப்பட்டவை. இவை தவிர பாஸர்வஞ்ஞரின் 'ந்யாய ஸாரம்' என்ற நூலுக்கு ஒரு உரை எழுதியுள்ளார். ஸ்ரீ ஆனந்தானுபவரின் 'ந்யாய ரத்ன தீபாவளி' க்கு ஸ்ரீ ஆனந்தகிரி விளக்க உரை எழுதியுள்ளார். இதற்கு 'வேதாந்த விவேகம்' என்று பெயர். இவரது 'பதார்த்த தத்வ நிர்ணயம்' என்ற நூலுக்கு ஆனந்தகிரியும், 'ஆத்ம ஸ்வரூப பகவான்' என்பவரும் தனித்தனியே விரிவான உரை எழுதியுள்ளனர்.

ஸ்ரீ ஆனந்தானுபவர் 'ஸ்ரீ நாராயண ஜ்யோதிஸ்' என்பவரின் சீடராக அறியப்படுகிறார். இவரது 'ந்யாய ரத்ன தீபாவளி' நூலில் குமரிலபட்டர், ப்ரபாகரர், விச்வரூபர், மண்டனமிச்ரர், வாசஸ்பதி மிச்ரர், ஹ௵சரித மிச்ரர், ஆனந்தபோதர் போன்ற பல அத்வைத வேதாந்த ஆசார்யர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஆனந்தபோதரின் காலம் கி.பி.1100-ஆவது ஆண்டாக இருக்கலாம் என கருதப்படுகிறது. ஸ்ரீ விமுக்தாத்மரின் காலம் கி.பி. 850க்கு மேல் 1050-க்குள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஸ்ரீ ஆனந்தானுபவர் கி.பி.12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஏனெனில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முன்பகுதியில் வாழ்ந்த ஸ்ரீ சித்ஸுகாசார்யர் தனது 'தத்வ ப்ரதீபிகா' என்ற நூலில் ஸ்ரீ ஆனந்தானுபவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

தனது 'பதார்த்த தத்வ நிர்ணயம்' என்ற நூலில் வைசேஷிகர்கள், பௌத்தர்கள், ஸாங்க்யர்கள், பூர்வமீமாம்ஸகர்கள் போன்றவர்களின் வாதங்களை ஆதார பூர்வமாகக் கண்டிக்கிறார். இந்நூல் இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பிரிவில் பூர்வபக்ஷம் கூறுகிறார். இரண்டாவது பிரிவில் அதனை கண்டித்து ஸித்தாந்தத்தை நிறுவுகிறார். 'ப்ரஹ்ம ஸத்யம்', ஜகந்மித்யா என்பதை ஆணித்தரமான வாதங்களின் மூலம் நிரூபிக்கிறார். 'ந்யாய ரத்ன தீபாவளி' அத்வைத வேதாந்தத்தின் ஸத்யத்தன்மையை விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கிறது. உபநிஷத் மந்த்ரங்களின் அடிப்படையில் அறிவு பூர்வமான வாதங்களுடன் அத்வைத ஸித்தாந்தத்தின் உண்மையை நிலைநாட்டுகிறார்.

தான் இரண்டற்ற ப்ரஹ்ம சொரூபம் என்பதை அநாதியான அவித்யா ஸம்பந்தத்தால் ஜீவன் உணர முடிவதில்லை. அவித்யையினாலேயே பொய்யான பிரபஞ்சம் நிஜம் போல் தோன்றுகிறது. ஜீவன் இந்த பொய்யான பிரபஞ்சத்தில் பந்தப்பட்டு விடுகிறான். ஆத்ம தத்துவத்தைப் பற்றிய சரியான ஞானமே பந்த நீக்கத்திற்கு வழி. இதனை உணர சித்த சுத்தி தேவை. சித்த சுத்திக்கு கர்மயோகம் தேவை. கர்ம யோகத்திற்கு பக்தி தேவை. கர்மம் மோக்ஷத்திற்கு நேரடியான சாதனமாக இல்லாவிட்டாலும் கூட கர்மா விடத்தக்கதல்ல என்கிறார். 'ந்யாய ரத்ன தீபாவளி' நான்கு அத்யாயங்களைக் கொண்டுள்ளது. வேதத்தின்

அபௌருஷேயத் தன்மையும், பிராமாண்யமும் முதல் அத்யாயத்தில் நிரூபிக்கப்படுகிறது. ஸச்சிதானந்த கனமாக இருக்கும் நிருபாதிகமான ப்ரஹ்மம் மாயையின் ஸம்பந்தத்தால் பிரபஞ்சத்திற்கு உபாதான காரணமாகிறது.

உபநிஷத்துக்களில் கூறப்படும் ஒவ்வாமைகள் வேதாந்த நோக்கு நிலையிலிருந்து காணும் போது சிறிதும் பொருந்தாது என்பதை இரண்டாவது அத்யாயத்தில் நிரூபிக்கிறார். அத்வைத ஸித்தாந்தத்தின் 'அநிர்வசநீயக்யாதி' யின் உண்மையை எடுத்துக்காட்டுகிறார். வைசேஷிகர்களின் பரமாணுவாதத்தைக் கண்டிக்கும் காலத்து இவர் பரமாணுக்களும் கூட பல கூறுகளுடையவை எனக் கூறுவது சிந்திக்கத்தக்கது.

மூன்றாவது அத்யாயம் ப்ரஹ்ம ஞானத்திற்கான சாதனங்களை விரிவாகப் பேசுகிறது. ஞானகர்ம ஸமுச்சயத்தைக் கண்டிக்கிறார். த்ரிதண்டி, ஏகதண்டி ஸந்யாஸம் சாஸ்திர ஸம்மதமானது எனக் கூறுகிறார். ச்ருதி, ஸ்ம்ருதிகளால் அங்கீகரிக்கப்பட்ட ஏகதண்டி ஸந்யாஸம் பரமஹம்ஸர்களுக்கு உரியது என்கிறார்.

முக்தி பற்றியும், அவித்யா நீக்கம் பற்றியும், ஜீவன் முக்தி பற்றியும் நான்காவது அத்யாயம் விவரிக்கிறது. அவித்யை ஜடத்தை ஆஸ்ரயித்திருக்கிறது என்பது பொருந்தாது. இதை நிரூபிக்க இயலாது. இதனைக் காட்டிக் கொடுக்க ஒரு ஸாக்ஷி இருக்கு என்றால் சைதன்ய ரூபமான ஸாக்ஷிக்கும் ஜடவஸ்துவுக்கும் உள்ள தொடர்பு நிரூபிக்க முடியாது. அவித்யையை ஒரு ஜட மேல் ஆரோபித்துச் சொல்வதால் எந்தவொரு பயனுமில்லை. இருப்பை மறைத்து இல்லாத ஒன்றைத் தோற்றுவிக்கும் ஆவரணம், விக்ஷேபம் என்ற இரு சக்திகள் அவித்யைக்கு இருக்கிறது. ஜட வஸ்துவுக்குத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றோ அல்லது தன் உண்மை சொரூபத்தை மறைத்து மாற்றிக் காண்பிக்க வேண்டும் என்றோ உணர்வில்லை. எனவே அவித்யை ஜடத்தை ஆஸ்ரயித்திருக்கிறது என்பது பொருந்தாது என்பது இவர் கருத்து.

அப்படியென்றால் சைதன்யமான ஜீவன் அவித்யைக்கு ஆஸ்ரயமாக இருக்கலாமே. 'எனக்குத் தெரியவில்லை' என்று ஒருவன் கூறும் போது, அவித்யை ஜீவனிடத்தில் இருக்கலாம் போலிருக்கிறதே. இதுவும் பொருந்தாது என்கிறார் ஆசிரியர். ஏன்? அந்தஃகரணம் எனும் உபாதியோடு கூடியிருக்கும் போதே சைதன்யம் ஜீவன் என்ற தோற்றத்தை அடைகிறது. இந்த அந்தக் கரணமே அவித்யை. இது 'நான் ப்ரஹ்மம்' என்ற அனுபவ ஞானத்தால் நீங்கக் கூடியது. 'ஞான நிவர்த்யத்வாத்'. அவித்யையின் காரியம். இதனை உபாதியாகக் கொண்ட ஜீவன் எவ்வாறு அவித்யைக்கு ஆஸ்ரயமாக இருக்க முடியும்? எனவே இது ஜீவனையும் ஆஸ்ரயமாகக் கொண்டிருக்கவில்லை; ப்ரஹ்மத்தையே ஆஸ்ரயமாகக் கொண்டிருக்க வேண்டும். இல்லாத ஒன்றை இருக்கும் ஒரு வஸ்துவின் மேல் ஏற்றி, இருக்கும் வஸ்துவை மறைப்பது இதனால் இது 'அநிர்வசநீயம்' எனப்படுகிறது. இது இருப்புமில்லை. இல்லாமையுமில்லை. இல்லாத ஒன்றை இருப்பது போல் தோன்ற வைக்கிறது. விசாரித்தால் காணாமற் போய்விடுகிறது இதுவே 'ஸதஸத் விலக்ஷணம்' என்கிறார். இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

# திருமூலர் காட்டும் அவள்

சிந்தாமணி

பாரத நாட்டில் உள்ள சமய நூல்களின் எண்ணிக்கை அளவிட முடியாது. வடமொழியிலும், தமிழிலும் உள்ள நூல்கள் அபரிமிதம். ஆழ்வார்களும், நாயன்மார்களும் அளித்த பாசுரங்கள் கணக்கற்றவை. சைவ நூல்களில் மிகச்சிறந்த நூலாக விளங்குவது திருமூலரின் **'திருமந்திரம்'** ஆகும். மற்ற திருமுறைகளை விட சிறப்பு வாய்ந்தது. சாத்திரமாகவும், தோத்திரமாகவும் இருப்பதினாலேயே இந்த சிறப்பு. திருமூல நாயனார் தன் யோக நிலையில் இருந்து மூவாயிரம் பாடல்களை அருளினார். சைவ சித்தாந்தமும், வேதாந்தமும், இணைந்து இந்நூலை சிறப்பிக்கின்றன. பெரும் யோக நெறியை காட்டுவதால் பொதுவாக எல்லாராலும் உரை செய்ய முடியாது. ஞானப் பயிற்சி உள்ளவர்களாலேயே செய்ய முடியும். அவர் நூலில் அவர் காட்டிய 'பராசக்தி'யைப் பற்றி இங்கு நோக்குவோம்.

முழுவதுமல்லாமல் சில பாடல்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நவராத்ரியில் பாடல்களை பொருள் உணர்ந்து ஒதுவோம். அவளே அலைமகள், கலைமகள், மலைமகள்.

### அவளே ஆதாரம்

**அவளை அறியா அமரரும் இல்லை**
**அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை**
**அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை**
**அவளன்றி ஊர்புகுமாறறியேனே**

### பராசக்தி

**பராசக்தி மாசத்தி பல்வகையாலுந்**
**தராசத்தியாய் நின்ற தன்மையுணராய்**
**உராசத்தி ஊழிகள் தோறும் உடனே**
**பராசத்தி புண்ணியமாகிய போகமே**

பராசக்தியே பல வகையாலும் மேன்மை உடையவள். அனைத்தையும் தாங்கும் ஆதார சக்தியாய் உணர்க. எங்கும் பரவும் சக்தி அவளே. ஊழிகள் தோறும் உயிர்களைக் காக்கும் ஆற்றல் உடையவள். புண்ணியப் பயனைத் தரும் வாழ்வும் அவளே.

## த்யானம்

**தாளணி நூபுரம் செம்பட்டுத் தானுடை**
**வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்**
**ஏரணி அங்குச பாசம் எழில்முடி**
**காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே**

செம்பட்டு உடை, காலணி, சிலம்பு கொங்கையில் அணி செய்யும் கச்சு, மலர் அம்பு கரும்பு வில், அங்குசம் பாசம் முடியின் மீது கிரீடம், காதில் நீல நிறக் குண்டலங்கள். இப்படித் த்யானம் செய்ய வேண்டும்.

## எல்லாம் அவளே

**திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்**
**பரிபுரை நாரணியாம் பல வன்னத்தி**
**இருள்புரை ஈசி மனோன்மணி என்ன**
**வருபல வாய் நிற்கு மாமாதுதானே**

அக்னி, சூர்யன், சந்த்ரன் என்று மூன்று கண்டங்கள், அழகு வாய்ந்தவள், ஆகாயமானவள், நாராயணி, பல வண்ணமுடையவள், மகேசன் சக்தி, சதாசிவ சக்தி இப்படிப் பல உருவங்கள் உடையவள் பராசக்தி.

## நாயகி

**உண்டில்லை என்ற துருச்செய்து நின்றது**
**வண்டில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது**
**கண்டிலர் காரணி காரணி தம்மொடு**
**மண்டல மூன்றுற மன்னி நின்றாளே**

உலகோர் உண்டு என்றும் இல்லை என்றும் கூறிய சக்தியே நுண்மையிலிருந்து தூலமாக்கியது. ஸஹஸ்ரார்தத்தில் நிலைபெற்று நின்றது. மக்கள் அவள் மூன்று மண்டலங்களிலும் நிறைந்து ஆன்மாவின் பந்த மோக்ஷத்திற்குக் காரணம் சிவ சக்தி என்பதை அறியார்.

## என்ன செய்தாள்?

**நின்றாளவந்தன் உடலும் உயிருமாய்ச்**
**சென்றாள் சிவகதி சேரும் பராசக்தி**
**ஒன்றாக என்னுட் புகுந்துணர் வாகியே**
**நின்றாள் பரன்சுடர் ஏடங்கையாளே**

சீவர்களின் உடலும், உயிருமாய் நின்றாள். ஊர்த்வ முகம் கொண்டு சிவகதி சென்றாள். ஒன்றாக என் உள்ளே புகுந்து உணர்வாகினாள். வேதமாகிய வாக்கை ஏந்தி நிற்கும் ஒளி வடிவமாகி நின்றாள்.

## நான் செய்வது

**ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி**
**வேடம் படிகம் விரும்பும் வெண் தாமரை**
**பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்**
**சூடும்மென் சென்னி வாய்த் தோத்திரம் சொல்லுமே**

முக்கண்ணியான அவள் வாக்ரூபத்தில் விளங்குபவள். வெண் தாமரையில் அமர்பவள், தூய வெண்ணிறத்தாள். வேதம் உரைப்பவள். அவள் பாதங்களை தலையில் நான் சூடுவேன். வாயால் தோத்திரம் சொல்லுவேன்.

## ஆனந்தம்

அறிவார் பராசக்தி ஆனந்தம் என்பர்
அறிவாரறிவுரு வாமவள் என்பர்
அறிவார் கரும மவளிச்சை என்பர்
அறிவார் பரனுமவளிடந்தானே

ஞானிகள் பலவிதமாக அவளைப் பேசுவர். அழியா ஆனந்தம் என்றும், சிலர் அரு, உரு அவள் என்றும் மக்களுக்கு கர்மபலனை அருள்பவள் என சிலர் பரமசிவன் அவளிடத்தில் இருப்பவர் என்று சிலர் கூறுவர். தூல சூக்கும வடிவங்கள் அனைத்தும் அவளே.

**பாலை**

**கொம்பனை யானைக் குவிமுலை மங்கையை**
**வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்**
**செம்பவளத் திருமேனிச் சிறுமியை**
**நம்பி என் உள்ளே நயந்து வைத்தேனே**

குவிந்த தனத்தியுடைய வாலைப் பெண்ணை வானவர் நாடும் திரிபுரையை செம்பவளத் திருமேனியுடையவளை கோதையை நான் லக்ஷியமாக்க கொண்டு என் உள்ளத்தில் விரும்பி வைத்தேன்.

**பல ஸ்ருதி**

தானே தலைவியென நின்ற தற்பரை
தானே உயிர்வித்துத் தந்த பதினாலும்
வானோர் தலமும் மனமும் நற்புத்தியும்
தானே சிவகதி தன்மையுமாமே

ஒரே தலைவியான தற்பரை பராசக்தி. பதினான்கு வித்தைகள், தேவ லோகங்கள், நல்ல நுண்ணறிவு, சிவ கதி இவை அனைத்தையும் பக்தர்களுக்கு அருள்வாள்.

# வாசகர்கள் அனைவருக்கும்
# இனிய
# தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# நவராத்திரி மகிமை — ஒரு சிறப்பு பதிவு



அன்னையின் நவ அம்சங்களை உணர்த்தும் நாயகியர் வழிபாடு வைபவமே நவராத்திரி.

புரட்டாசி மாதத்தில் வரும் மஹாளய அமாவாசையை அடுத்த பிரதமை முதல் 9 நாட்களுக்கு செய்யப்படும் தேவி வழிபாடு மிகச் சிறப்பானது. இதில் 3 நாட்களில் ஆதிபராசக்தியை துர்க்கையாகவும், 3 நாட்களுக்கு லட்சுமியாகவும், 3 நாட்கள் சரஸ்வதியாகவும் வழிபடுகிறார்கள். வழக்கத்தில் இரண்டு ராத்திரிகள் தான் இருக்கின்றன. ஒன்று, சிவராத்திரி. மற்றொன்று, நவராத்திரி.

‘நவ’ என்பது ஒரு சிறப்பு வாய்ந்த சொல்லாகும். இதற்கு இரு பொருள்கள் உண்டு. ஒன்று, ஒன்பது. மற்றொன்று புதியது. ஆக இந்த நவராத்திரியை ஒன்பது ராத்திரிகள் என்று பொருள் கொள்வதைவிட, புதிய ராத்திரிகள் என்று பொருள் கொள்ள வேண்டும்.

இந்த நவராத்திரி பூஜையானது முக்கியமாக சுமங்கலிகளுக்குரியதாகும். காரணம், இதில் மூன்று தெய்வச் சுமங்கலிகள் இடம் பெறுகின்றனர். அவர்கள் தான் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற வரிசைப்படி பார்த்தால் முதலில் பிரம்மா, பிறகு விஷ்ணு, முடிவில் சிவன். இம்மூவரின் துணைவியர் முறையே சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை என்று வரும். ஆனால் நவராத்திரியில் இந்த வரிசை துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என்றாகிறது.

விஷ்ணு தத்துவத்தையும், எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் நூற்றியெட்டு திவ்ய தேசங்களின் வைபவங்களையும் சொல்வது ஸ்காந்த புராணம். ஸ்காந்த புராணத்தின் அதிபதி துர்க்கை. பரமேஸ்வரனிடம் லட்சுமியின் பிரபாவத்தினை துர்க்கை கேட்க, அவர் சொன்னதாகவே இதில் இருக்கிறது. மலைமகளான துர்க்கையே முதல் மகளாக இருப்பதால், நவராத்திரியில் முதல் மூன்று நாட்களும் துர்க்கை இடம் பெறுகிறாள்.

ராத்ரம் என்றால் மங்களம். மங்களனாகிய செவ்வாய்க்கு அதிதேவதை துர்க்கை. அகத்தையும், புறத்தையும் அழகுப்படுத்தித் தூய்மைப்படுத்துவதற்காக துர்க்கை முதலில் வருகிறாள்.

முதல் ராத்திரியில் மலர்களால் துர்க்கையை வழிபட சர்வமங்கள ரூபிணியாக அவள் வீற்றிருப்பாள். இரண்டாவது ராத்திரியில் ஆபரணங்கள் அணிவித்து பூஜிக்க, சர்வாபரண பூஷிதையாக அருள்பாலிப்பாள். மூன்றாவது ராத்திரியில் முதலில் செய்வித்த பூஜைகளுக்கு மகிழ்ந்து ஞானத்தை நல்குகிறாள். முதல் மூன்று நாட்கள் மங்களத்தையும், அருளையும், ஞானத்தையும் துர்க்கையிடமிருந்து பெற்ற நாம், அடுத்து நான்கு, ஐந்து, ஆறாவது நாட்கள் செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமியை பூஜிக்க வேண்டும். நான்காம் நாள் மஹாலக்ஷ்மியை வழிபட அன்னை நமக்கு அருள் பாலிக்கிறாள். ஐந்தாவது நாள் பூஜையில், சௌபாக்கியங்களும், ஆயுள் விருத்தியும், ஆறாவது நாளில் உணவும், தந்து மஹாலக்ஷ்மி காத்தருள்வாள்.

ஏழு, எட்டு, ஒன்பதாவது நாட்களில் வித்தைக்கு அதிபதியான சரஸ்வதி என்கிற கலைவாணியை நாதஸ்வரூபமாக வழிபட நமக்கு வினயம் தந்து அருள்கிறாள். எட்டாவது நாளில் நமக்கு எட்டாததை எட்டச் செய்து ஏற்றத்தை நல்குகிறாள். ஒன்பதாம் நாள் பூஜையில் அழியாதத் தன்மை தருகிறாள்.

பத்தாவது நாள் விஜயதசமி. விஜயம் என்றாலே வெற்றி!

நவராத்திரியின் போது துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என்று இம்மூவரையும் பூஜிப்பவர்களுக்கு எதிலும் வெற்றி, எல்லா நலனும் கிடைக்கும். அதை உணர்த்துவதே விஜயதசமி. கோடைக்கால, மழைக்கால தொற்று நோய்களிலிருந்து நமது உடலையும் உள்ளத்தையும் காப்பவள் அம்பிகை. அவளுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டே 'நவராத்திரி'. 'அகிலத்தில் இருக்கும் அத்தனை உயிர்களும் அம்பிகையின் கருணையினால் உயிர் வாழ்கின்றன என்ற தத்துவத்தை விளக்குவது நவராத்திரி.

பொம்மைகளை, வைக்க நமது முன்னோர்கள் ஒரு ஐதிகத்தை கூறியுள்ளார்கள். கொலுப்படிகள் 9, 7, 5 என ஒற்றைப் படையில் அமைய வேண்டும். எந்தெந்தப் படியில் என்னென்ன பொம்மைகளை வைக்க வேண்டும் என்று முறை இருக்கிறது.

கீழிருந்து முதல் படியில் ஓரறிவு உள்ள உயிரினங்களின் பொம்மைகள் — செடி, கொடி, மரங்கள், பூங்கா, சிறிய அளவிலான தோட்டம் ஆகியவை.

இரண்டாவது படியில் இரண்டறிவு உள்ள ஊர்ந்து போகும் அட்டை, நத்தை, சங்கு போன்றவையும் — மூன்றாவது படியில் மூன்று அறிவு உயிரினங்களான கரையான், எறும்பு முதலானவையும் — நான்காவது படியில் நான்கு அறிவு உள்ள உயிரினங்களான வண்டு, பறவை முதலியவைகளும், — ஐந்தாவது படியில் ஐந்தறிவு உயிரினங்களான பசு முதலான விலங்கினங்களின் பொம்மைகளை வைக்க வேண்டும்.

ஆறாவது படியில் ஆறறிவு ஜீவராசிகளான மனித வடிவங்கள், வாத்திய கோஷ்டி முதலியனவைகளும் — ஏழாவது படியில் மகான்கள், ஞானிகளின் உருவங்களும் — எட்டாவது படியில் தெய்வ அவதாரங்கள், தெய்வ வடிவங்கள் முதலானவற்றை வைக்க வேண்டும். — ஒன்பதாவது படி, உச்சியில் இருப்பதில் பூர்ண கும்பத்துடன் அம்பிகை திருவுருவம் இருக்க வேண்டும்.

அம்பிகையின் அருளாட்சியின் கீழ்தான் அனைத்து ஜீவராசிகளும் வாழ்கின்றன என்பதுடன், அவை படிப்படியாக முன்னேறி வாழ்வில் உயர்ந்து மேன்மை அடைகின்றன என்பதையும் இந்த அமைப்பு விளக்குகின்றன. நியமத்தோடு இருந்து நவராத்திரி பூஜை செய்ய முடியாதவர்கள், அஷ்டமி அன்று மட்டுமாவது அவசியம் பூஜை செய்ய வேண்டும். நவராத்திரி காலத்தில் ஒன்பது நாட்களும் விதிப்படி கன்னிகைகளை பூஜை செய்ய வேண்டும். பூஜை முறைகளையும், பலன்களையும் வியாசர் விரிவாக எழுதி வைத்திருக்கிறார்.

நவராத்திரியின் முதல் நாளன்று ஏழ்மை நீங்க 2 வயதுள்ள ஒரு பெண்ணை ‘குமாரி’ யாக பாவித்து பூஜை செய்ய வறுமை நீங்கும். — இரண்டாம் நாளில் 3 வயதுள்ள பெண்ணை ஆயுளும், செல்வமும் பெருக திரி மூர்த்தி என்ற பெயரால் பூஜை செய்ய வேண்டும். — மூன்றாவது நாளில் அறம், பொருள், இன்பம், நீண்ட ஆயுள் உண்டாகும் பொருட்டு 4 வயது பெண்ணை கல்யாணி என்ற பெயரால் பூஜை செய்ய வேண்டும். — நான்காவது நாளில் கல்வி ஞானம் பெற 5 வயது பெண்ணை ரோகிணி என்ற பெயரால் பூஜை செய்ய நோய்கள் நீங்கி ஆரோக்கிய வாழ்வு கிடைக்கும்.

ஐந்தாவது நாளில் 6 வயது பெண்ணை காளிகா என்ற பெயரால் பூஜை செய்ய பகைவர்களை வெல்லலாம் — ஆறாவது நாளன்று 7 வயது பெண்ணை ‘சண்டிகா’ என்ற பெயரால் பூஜை செய்தால் செல்வச் செழிப்பு உண்டாகும் — ஏழாவது நாளன்று 8 வயதுள்ள பெண்ணை ‘சாம்பவி’ என்ற பெயரால் பூஜை செய்ய அரசாங்க உத்தியோகம் கிடைக்கும். பகைமையை வேரறுக்கும் — எட்டாவது நாளன்று 9 வயது பெண்ணை ‘துர்க்கை’ என்ற பெயரால் பூஜை செய்ய கஷ்டமான காரியங்களையும் சிரமமின்றி செய்யும் சக்தியைக் கொடுக்கும் — ஒன்பதாவது நாளன்று 10 வயதுள்ள பெண்ணுக்கு ‘சுபத்ரா’ பூஜை செய்ய வேண்டும். இதனால் புலனடக்கம் உண்டாகும்.

வசதியும் மனமும் உள்ளவர்கள், முதல் நாள் அன்று ஒரு பெண், இரண்டாம் நாளன்று இருவர் என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னிகையை அதிகமாக வரவழைத்தும் பூஜை செய்யலாம். இது நிறைந்த பலன் தரும்.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

## கனவில் அருள்



ஒரு நாள் விடியற்காலை 4 மணி இருக்கும். கனவு ஒன்று வந்தது. வீடா, மடமா தெரியவில்லை. மகா பெரியவா முன் நிற்கிறார். தபஸின் உரு. ஒரு உரையாடல் நடக்கிறது.

‘இப்போ நீ என்ன பண்ணிண்டிருக்க? பெரியவா’

‘நான் மூணு வேளையும் ஸந்த்யாவந்தனம் பண்ணிண்டிருக்கேன்.’

‘யார் சொன்னா?’

‘நீங்கள் தான் மூணு வேளையும் பண்ண வேண்டும் என்றீர்கள்’

‘நான் வேறு என்னவோ சொன்னேனே?’

‘அதையும் செய்கிறேன்’

‘காபி குடிப்பதை விட்டாயா?’

‘இல்லை’

‘உனக்கும், உன் அப்பாவிற்கும் கோபம் நிறைய வருமே’

‘குறைத்துக் கொண்டு வருகிறேன்’

பாடம் சொல்லிக் கொடுக்கிறாயா?’

‘ஆமாம்’

பசங்களிடம் காசு வாங்குகிறாயா?

‘இல்லை’

*‘எத்தனை குழந்தைகள்?’*

*‘ஒரு பெண் குழந்தை’*

*‘கல்யாணம் ஆயிடுத்தா?’*

*‘பெரியவாளுடைய ஆசீர்வாதத்தால் ஆகிவிட்டது’*

*பிறகு கையில் பூவும், அக்ஷதையும் தந்து நன்னாயிரு என்று ஆசீர்வதித்தார். என் வீட்டார் விடியற்கால கனவு பலிக்கும் என்றார்கள். ஆதி ஆசார்யாள் நாடெல்லாம் சுற்றி ஷண்மத ஸ்தாபனம் செய்து சன்மார்க்கத்திற்கு வழி வகுத்தார். அதே வழியில் வரும் நம் ஆசார்யாள் ஜீவன் முக்தராகத் திகழ்ந்து ஆத்ம பூஜையில் ஆழ்ந்து லோக க்ஷேமத்திற்காக பாடுபடுகிறார்.*

*ஒரு சமயம் தனது உரையாடலில் கூறினார். ‘எனக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணிக் கொண்டு வருகிறார்கள். உண்மையில் நான் அறிந்தது மக்களின் கஷ்டத்தை. அதை எப்படிப் போக்குவது என்பது மட்டுமே. இன்னொரு சமயம் நீங்கள் கூறுவதுபோல் க்ரமப்படி வாழ்க்கையை நடத்த முடியுமா?*

*அதற்கு அவர் ‘நான் ஸாஸ்த்ர முறைகளை தீவிரமாகப் ப்ரசாரம் செய்து வருவதால் குறைந்த அளவில் மக்கள் அதைப் பின்பற்றுகிறார்கள்’ என்று அடக்கத்துடன் கூறினார். ஸ்ரீ ஜகத்குரு நமக்கு ஒரு சிறந்த குருவாகவும், அம்மை, அப்பனாகவும் விளங்கி வருவது நாம் செய்த பாக்யம்.*

**புத்தேள் உலகத்தும் ஈண்டும்பெறல் அரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற**

**பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப் போல நல்லதாகிய வேறு அறப்பகுதிகளை தேவலோகத்திலும், இவ்வுலகத்திலும் பெறுதல் இயலாது.**

(குறள் : 226)

தாராளமாக இருப்பவர்கள் மரிப்பதில்லை. அவர்கள் அழிவதும் இல்லை; தொல்லையோ, கஷ்டமோ அடைவதும் இல்லை. தமது தர்மத்தாலும், தானத்தாலும் அவர்கள் பூவுலகத்தையும், விண்ணுலகத்தையும் வெல்கின்றனர்.

(ரிக்வேதம் : 10-117-6)

# ஆழ்வார்கள் சரித்ரம்

## திருமழிசை ஆழ்வார்

*திருமண்டங்குடி என்னும் ஊரில் வைஜயந்தி மாலையின் அம்சமாக நம் ஆழ்வார் அவதரித்தார். விப்ர நாராயணர் என்பது இயற்பெயர். சிறுவயதிலேயே எம்பெருமானிடம் பக்தி உடையவர். ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்து வந்த அவர் நந்தவனம் ஒன்றை அமைத்து பலவிதமான பூச்செடிகளை வளர்த்து வந்தார். மலர்களைத் தொடுத்து எம்பெருமானுக்கு சூட்டி மகிழ்வார்.*

*ஸ்ரீரங்கத்திற்கு அருகில் கணிகையர் குலத்தில் பிறந்தவள் தேவதேவி. அவளும் அவளுடைய மூத்த சகோதரியும் ஒரு நாள் ஆடல், பாடல் நிகழ்த்திய பின் ஆழ்வார் வைத்திருந்த நந்தவனத்தின் பக்கம் வந்தனர். நந்தவனத்தின் அழகில் மயங்கினாள் தேவதேவி. இவர்களைப் பாராமல் நந்தவனத்திற்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார் விப்ர நாராயணர். தன்னை அலக்ஷியம் செய்து விட்டதாக தேவதேவி நினைத்தாள்.*

*அவரைப் பற்றி விசாரிக்க அவர் விஷ்ணுவின் தொண்டில் மிகவும் ஈடுபாடு உடையவர். வேறு எதையும் பொருட் படுத்தாதவர் என்று அறிந்தாள். அவளது சகோதரி அவளிடம் அவரை உன் வசப்படுத்தினால் ஆறு மாதங்கள் அடிமையாய் இருப்பேன் என்று சபதம் செய்தாள்.*

*தன்னை எளிமையாகக் காட்டிக் கொண்டு விப்ர நாராயணரிடம் சென்று அவருக்குத் தொண்டு செய்ய அனுமதி கோரினாள். அவரும் சம்மதிக்க அவரது எம்பெருமான் தொண்டு தொடர்ந்தது. அவளும் தக்கச்சமயத்தை எதிர்பார்த்து காத்து வந்தாள். மழை உருவில் வந்தது வினை. ஒரு நாள் பெருமழை பெய்தது. மழையில் நனைந்து நின்ற அவளிடம் இரக்கம் கொண்டார் விப்ர நாராயணர். அவளை வீட்டின் உள்ளே அழைத்து உலர் ஆடையை அளித்தார். இதுதான் சமயம் என்று அவரைத் தீண்ட மோகத்தீயில் விழுந்தார். அவள் வசமானார்.*

*திருமால் தொண்டை மறந்தார். தேவதேவி தன் சபதம் நிறைவேறியது கண்டு மகிழ்ந்தாள். தன் வீடு திரும்பினாள். விப்ர நாராயணர் விரஹ தாபத்தில் அவள் வீடு சென்றார். அவளோ மமதையில் அவரை அலக்ஷியப்படுத்தினாள். அதையும் பொருட்படுத்தாமல் அவள் வீட்டு வாசலிலேயே கிடந்தார்.*

*அவரை ஆட்கொள்ள விரும்பிய எம்பெருமான் ஒரு தங்கத் தட்டை தேவதேவியிடம் தான் விப்ர நாராயணரின் சீடர் என்றும் அவர் இந்த தட்டைத் தந்துள்ளார் என்று கூறி*

அவளிடம் தட்டைத் தந்தார். மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக் கொண்டு வாசலில் கிடந்த விப்ர நாராயணரை உள்ளே வர விட்டாள். மறு நாள் கோவிலில் தட்டு காணாமற் போய்விட்டது என்னும் விஷயம் தெரிய வந்தது.

அரசன் விசாரனைக்கு உத்தரவிட்டான். தங்கத்தட்டு தேவதேவி வீட்டில் இருப்பது தெரிந்த அரசன் அது சம்பந்தமாக விப்ர நாராயணரை சிறை வைத்தான். அரசனின் கனவில் தோன்றி எம்பெருமான் உண்மையைக் கூறி விப்ர நாராயணரை விடுதலை செய்து பூமாலை கைங்கர்யத்திற்கு அனுப்புமாறு கூறினான்.

விடுதலையான விப்ர நாராயணரும் மயக்கம் தெளிந்து எம்பெருமான் மயக்கம் கொண்டார். பெருமாள் பித்தராகி எம்பெருமான் அடியவர்களின் பாத தூளியே தாம் கடைத்தேற ஒரே வழி என்றுணர்ந்து தன் பெயரை **'தொண்டரடிப்பொடி'** என்று மாற்றம் செய்து கொண்டார். தன் இஷ்ட தெய்வமான ரங்கநாதனைக் குறித்து திருபள்ளியெழுச்சி, திருமாலை என்னும் ப்ரபந்தங்களை உலகுக்கு அருளி தம் நூற்றி ஐந்தாவது வயதில் பரமபதம் ஏகினார்.

வாழ்க அவரது தொண்டு.

## ஆழ்வாரின் பாசுரம்

மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிகவுணர்ந்து
ஆம்பரிசு அறிந்து கொண்டு ஐம்புலன் அகத்து அடக்கி
காம்பரத் தலைசிரைத்துன் கடைத்தலை இருந்து வாழும்
சோம்பரை உகத்திபோலும் சூழ் புனல் அரங்கத்தானே.

(திருமாலை)

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனவிருளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவர்அரசர்கள் வந்து தீண்டி
எதிர்த்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
அதிர்தலிலலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம் மா பள்ளீயெழுந்தருளாயே

(திருப்பள்ளியெழுச்சி)

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 10. இரண்டுக்கும் மனதே காரணம்

மனம் மிக அற்புதமான கருவி. இதை எந்தப் பிரமாணங்களினாலும் அறிய முடியாது. இதற்கு அந்தக் கரணம், (உள்ளிருக்கும் கருவி) என்றும் பெயர். நம் மனதில் இருப்பதை நாமே அறிய முடியாமல் இருக்கும் பொழுது பிறர் மனதை எவ்வாறு அறிய முடியும்?

மனம் ஒரு சிரேஷ்டமான சம்பத்து. மனிதனின் வாழ்க்கையை நியமனம் செய்வதும், சரீரம் மற்றும் இந்திரியங்கள் செயல்படுவதும், அல்லது செயலற்று இருப்பதும் மனதினாலே தான். மனிதர்களுக்கு உண்டாகும் சுக துக்கங்கள், விவேக, அவிவேகங்கள், சம்சாரம், சந்நியாசம், ராகத் வேஷம், சாந்தி, அசாந்தி மற்றும் ஆரோக்யம், நோய் எல்லாவற்றுக்கும் மனமே மூலகாரணம். அதேபோல் மனிதனின் பந்தனத்திற்கும் முக்திக்கும் மனம் தான் காரணமாகிறது. **மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:**. ராவணனின் அகங்காரத்திற்கும், ராமனின் சம நிலைக்கும், மனம் தான் காரணம். துரியோதனனின் பேராசைக்கும், தர்மராஜனின் தியாகத்திற்கும் மனம் தான் காரணம். ஆகவே ஒரு மனிதன் மேன்மையான நிலையை அடைவதற்கும் அல்லது நாசமாவதற்கும் மனமே காரணம்.

இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாத மனதிற்குச் சரியான பயிற்சியளித்துப் பக்குவப்படுத்த வேண்டும். ஆத்யாத்மிக சாதனைகளினாலும் சாத்வீக ஆகாரங்களினாலும், சுத்த ஆசார விசாரங்களினாலும், சஞ்சலமான மனதை நல்வழிப் படுத்தினால் அதே மனமே மனிதனைக் காப்பாற்றி உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கிறது. மனதை அதன் போக்கில் விட்டு விட்டால் தானும் கெட்டு பிறரையும் கெட்ட வழிகளில் செலுத்தி விடும்.

The uncultured, uneducated, unspiritualised MIND becomes Mischievous, Industrious, Notorious and Dangerous; This same MIND when spiritually refined becomes Moral, Introvert, Noble and Divine. வேதோபநிஷத்துக்களில் கூறியிருக்கும் சந்தேசங்களை அநுஷ்டானம் செய்தும், சுத்தமான மனதுடையவர்களாய் எல்லோருக்கும் நன்மையையே செய்வோம்.

# மூக ஸாரம்

## இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூக கவியினால் இயற்றப்பட்ட மூக பஞ்சசதியை எல்லாரும் அறிவர். காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது மூக பஞ்சசதி. அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை 'மூக ஸாரம்' என்னும் தலைப்பில் மறைந்த ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன் தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாராயணம் செய்வோம்.

**चेत: शीतलयन्तु न: पशुपतेरानन्दजीवातवो**
**नम्राणां नयनाध्वसीमसु शरच्चन्द्रातपोपक्रमा:।**
**संसाराख्यसरोरुहाकरखलीकारे तुषारोत्करा:**
**कामाक्षि स्मरकीर्त्तिबीजनिकरास्त्वन्मन्दहासाङ्कुरा:।।३१।।**

**சேத: சீதளயத்து ந: பசுபதேராநந்தஜீவாதவ:**
**நம்ராணாம் நயநாத்வஸீமஸு சரத் சந்த்ராதபோபக்ரமா:।**
**ஸம்ஸாராக்ய ஸரோருஹாகர கலீகாரே துஷாரோத்கரா:**
**காமாக்ஷிஸ்மரகீர்த்திபீஜநிகரா: த்வந்மந்தஹாஸாங்குரா:।।31**

*காமாக்ஷியே! பசுபதியென்னும் பரமசிவனுடைய ஆனந்தத்திற்கு உயிர் நிலை போன்றவைகளும், வணங்குவோரின் கண்கள் செல்லும் பிரதேசங்களில் சரத்காலத்து நிலாவின் ஆரம்பம் போன்றவைகளும், ஸம்ஸாரமென்ற பெயர் பெற்ற தாமரைத் தடாகத்தை அழிக்கும் விஷயத்தில் கடும்பனி போன்றவைகளும், மன்மதனுடைய கீர்த்தியை விளைவிக்கும் வித்துக்கள் போன்றவைகளுமான உன் இளம் புன்னகைகள் எங்களுடைய மனதைக் குளிரச் செய்யட்டும்.*

कर्पूरैरमृतांशु(बु)र्भिजननि ते कान्तैश्च चन्द्रातपै-
र्मुक्ताहारगुणैर्मृणालवलयैर्मन्दस्मितश्रीरियम्।
श्रीकाञ्चीश्वरि सज्जनैः समतया कामाक्षि संस्तूयते
तत्तादृङ्मम तापशान्तिविधये किं देवि मन्दायते।।२४।।

கர்ப்பூரை: அம்ருதாம்சு(பு)ப: ஜநநி! தே காந்தை: ச சந்த்ராதபை:
முக்தா ஹார குணை: ம்ருணால வலயை: மந்தஸ்மித ஸ்ரீரியம்।
ஸ்ரீ காஞ்சீச்வரி! ஸஜ்ஜநை: ஸமதயா காமாக்ஷி! ஸம்ஸ்தூயதே
தத் தாத்ருக் மம தாப சாந்தி விதயே கிம் தேவி மந்தாயதே ।। 24 ।।

*காஞ்சீச்வரியே! தாயே! காமாக்ஷி தேவியே! உனது இந்த மந்தஹாஸகாந்தி அம்ருத கிரணங்களோடும், பச்சைக் கற்பூரத்தோடும், அழகு பொருந்திய நிலாவோடும், முத்து ஹாரஸரங்களோடும், தாமரைத் தண்டுகளோடும் ஸமானமாயிருப்பதாக ஸாதுக்களால் மிகவும் புகழப்படுகிறது. அப்படி குளிர்ச்சியான தன்மையுள்ள உன் புன்சிரிப்பு என் தாபத்தைப் போக்கும் விஷயத்தில் மட்டும் ஏன் தாமதிக்கிறது?*

*தேவியே! என்னுடைய கஷ்டம் நான் செய்த வினைக்கு ஏற்குமாயினும் உம்முடைய புன்சிரிப்பாகிய திருவருட் பெருக்கத்துக்கு ஏற்காதென்பதாம். அதாவது: உன் புன்சிரிப்போ உலகத்தில் உஷ்ணத்தைப் போக்க வல்லவையும், குளிர்ச்சியுள்ளவைகளுமான கற்பூரம், அமுதம், நிலா, முத்து, தாமரைத் தண்டு என்பவைகளுக்கு ஸமானமாய் இருப்பதாகப் பெரியோர்களால் துதிக்கப்படுகிறது. ஆனால் என் ஸம்ஸார தாபத்தைப் போக்கும் விஷயத்தில் மட்டும் ஏன் தாமதிக்கிறது.*